விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 25 செவ்வாய்க்கிழமை (08.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இந்தியாவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம்

## மன்மோகனுக்கு அனுப்பினார் ஜனாதிபதி

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25-வது கூட்டத்தொடரில் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான மூன்றாவது பிரேரணைக்கு ஆதரவு வழங்காதமைக்கு நன்றி தெரிவித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடிதம் எழுதியுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு 23 நாடுகள் ஆதரவு வழங்கியிருந்தன.

இப்பிரேரணைக்கு எதிராக 12 நாடுகள் வாக்களித்திருந்தன. அதேவேளை, இப்பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இந்தியா உள்ளிட்ட 12 நாடுகள் பங்கேற்கவில்லை.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரித்தே இந்தியா வாக்களித்திருந்தது.

இந்தியாவின் இந்த நிலைப்

20 ஆம் பக்கம் பார்க்க..

## பிரேரணை வாக்கெடுப்புக்கு முன் பீரிஸிடம் பேசினார் குர்ஷித்!



(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25வது கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம் பெற முன்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தம்முடன் தொலைபேசியில் உரையாடியதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் இடம் பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் மூத்த அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை மீது கடந்த மாதம் 27ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு முதல் நாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் தன்னை தொலைபேசி

20 ஆம் பக்கம் பார்க்க..

## மாணவர் விடுதியில் தேடுதல் வேட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான கோப்பாய் மாணவர் விடுதியில் உள்நுழைந்து பொலிஸார் தேடுதல் நடத்தியுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வித காரணங்களும் இன்றி நேற்று காலை விடுதிக்குள் உள்நுழைந்த பொலிஸார் துருவித் துருவி விசாரணை நடத்தியுள்ளதுடன் தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், அச்சமடைந்த மாணவர்கள் விடுதியினை விட்டு வெளியேறி வருவதாக அங்கிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க..

## அரசியல்வாதிகளின் கோரிக்கையை அரச அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும்

### ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை அரசியல் தலையீடு என கருத வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சுகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.



அவ்வாறான கோரிக்கைகள் தொடர்பில் முக்கியத்துவ அடிப்படையில் செயற்படுமாறு ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அமைச்சர்கள்,

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஜனாதிபதிக்கு 34ஆவது இடம்

(கொழும்பு)

2014ம் ஆண்டில் ஆசிய நாடுகளில் செல்வாக்கு மிகுந்த தலைவர்களின் 100 பேர் பட்டியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 34-வது இடத்தை பெற்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

"ஆசியன் அவார்ட்ஸ்" அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் தலைசிறந்த 100 ஆசியர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கிறது. இந்நிலையில் இந்த ஆண்டுக்கான பட்டியல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது.

20 ஆம் பக்கம் பார்க்க..

## புலிகள் செய்த கொலைகளினை மேற்குலகம் கண்டு கொள்ளவில்லை

### நாமல் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயல்களினால் நாட்டின் முக்கியமான தலைவர்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் நாட்டின் முக்கியமான தலைவர்களை மாத்திரம் கொலை செய்யவில்லை. பௌத்த பிக்குகள் உட்பட நாட்டில் வாழும் சகல இன மக்களையும் கொலை செய்தனர்.

30 வருட போர் வரலாற்றில் நாட்டில் குற்றச் செயல்கள் இடம் பெற்றன. எனினும் போரின் இறுதிக் கட்டத்தின் நான்கு நாட்களை பற்றி மட்டுமே இப்போது பேசுகின்றனர்.

விடுதலைப் புலிகள், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான முக்கிய தலைவர்களை கொலை

19 ஆம் பக்கம் பார்க்க..

## கண்காணிப்பாளர் எவரையும் நாட்டிற்குள் அனுமதிக்கக் கூடாது

### பேராசிரியர் நளின் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் போர்க் குற்றக் கண்காணிப்பாளர்கள் நாட்டுக்குள் வர அனுமதிக்க கூடாது என்று தென்னிலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறு நாட்டுக்குள் அவர்களை அனுமதிப்பதன் மூலம் ஏற்கெனவே அவர்கள் தயாரித்து வைத்திருக்கும் இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல் அறிக்கைக்கு சட்ட அந்தஸ்து வழங்குவதாக அமைந்து விடும் என்று தென்னிலங்கை பேராசிரியரான

20 ஆம் பக்கம் பார்க்க..

## தேசிய ஐக்கியத்தின் எதிரியை அடையாளம் காண வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

தேசிய ஐக்கியத்தின் உண்மையான எதிரியை அடையாளம் காண வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேசிய ஐக்கிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ஐக்கியத்தின் உண்மையான எதிரியை அடையாளம் காண்பதற்காகவே அரசாங்கம் மொழிகளுக்கு உரிய இடத்தை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சிங்கள மக்கள் தமிழ் மொழியை கற்கவும்,

20 ஆம் பக்கம் பார்க்க..

கனடாவில் படிக்க உழைக்க 20 இலட்சம் மட்டும் போதும்
★ எண்ணி 5 தினங்களுக்கு மட்டுமே. 10 பேருக்கு மட்டுமே இவ்வாய்ப்பு
7 நாட்களும் திறந்திருப்போம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 221 9016, 021 499 3501
www.thisaivisa.com
(C-6964)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாம் அமைச்சர் கோத்தபாயவுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள வியட்நாம் நாட்டின் பொது பாதுகாப்பு அமைச்சர் ட்ரென் டை குவேங்க் தலைமையிலான பிரதிநிதிகள் நேற்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த சந்திப்பு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

பாதுகாப்பு செயலாளருக்கும், வியட்நாம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இந்த சந்திப்பில், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான முக்கியமான இருதரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

சந்திப்பின் பின்னர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் வியட்நாம் அமைச்சர் ஆகியோர் நினைவுப் பரிசுகளை பரிமாறிக் கொண்டனர். (எ-11)

# இராணுவக் கெடுபிடிக்குள் சிக்கித்தவிக்கும் தமிழ் மக்கள்

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் வட பகுதியில் தமிழ் மக்கள் இராணுவ நெருக்குவாரத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். கடந்த ஒரு மாத காலமாக இங்கு நடைபெற்று வருகின்ற இராணுவ சுற்றி வளைப்புக்கள், தேடுதல்கள் என்பவற்றை முப்படைகளின் தளபதியாகிய ஜனாதிபதி உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரியிருக்கின்றது.

கோபி என்பவரின் தலைமையில் விடுதலைப் புலிகள் மீண்டும் அணி சேர முயற்சிக்கிறார்கள் எனக் கூறி, அவரைப் பற்றி தகவல் தருவோருக்கு பத்துலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று அறிவித்து, இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் நடத்தப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதி நேற்று முன்தினம் இராணுவத்தினரால் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தப்பட்டிருப்பதாகவும், வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக இராணுவத்தினர் சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதிகாலையில் தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கச் செல்லும் தோட்டச் செய்கையாளர்களாகிய வயோதிபர்களும் தங்களுடன் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு செல்ல வேண்டும் என்று இராணுவத்தினர் வற்புறுத்தியிருக்கின்றார்கள். இதனால் மீண்டும் ஒரு யுத்த நிலைமை ஏற்பட்டுவிட்டதோ என்று தமிழ் மக்கள் அச்சமடைந்திருக்கின்றார்கள். இந்த நிலைமையை இல்லாமல் செய்ய வேண்டும். அதற்கு உடனடியாக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளம் பெண்களை இராணுவத்தில் சேர வேண்டும் என்று இராணுவத்தினர் வன்னியில் வற்புறுத்தி வருகின்றனர். யுத்தத்தில் பெற்றோரை இழந்து தனிமையில் அண்ணனுடன் வாழ்ந்து வருகின்ற தங்கை, இராணுவத்தில் சேர மறுத்ததையடுத்து, அண்ணனை இராணுவத்தினர் கைது செய்ததாக எமக்கு முறையிடப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளை அனுமதிக்கமுடியாது. இது பற்றியும் ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்தம் முடிவடைந்த பின்பும், விடுதலைப் புலிகள் மீண்டும் அணிசேர முயற்சிக்கிறார்கள் எனக் கூறி, தமிழ் மக்கள் அனைவரையும் நெருக்குதல்களுக்கு உள்ளாக்கியிருக்கின்ற நெருக்கடியான சூழலை இல்லாமல் செய்து, அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை முன்னெடுப்பதற்குரிய சூழலை உருவாக்குவது முக்கியமாகும்.

வட இலங்கையில் தற்போதுள்ள இவ்வாறான நிலைமைகளை எடுத்துக் கூறி பேச்சு நடத்துவதற்காகவே தென்னாபிரிக்காவுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று செல்லவுள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. (எ-11)

# யாழ்ப்பாணம் கொழும்புக்கிடையில் அதி நவீன தனியார் புகையிரத சேவை

## துவாரகேஸ்வரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அதி நவீன தனியார் சொகுசு புகையிரத சேவையொன்று விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வர்த்தகருமான தியாகராஜா துவாரகேஸ்வரன் தெரிவித்துள்ளார்

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழிலுள்ள ரில்கோ விடுதியில் நேற்று மதியம் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் உதவியுடன் வடக்கிற்கான புகையிரத சேவை வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கமைய பளை வரையிலான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற அதேவேளையில் இந்த வருட இறுதிக்குள் யாழ் வரையிலான சேவைகளும் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புதிய புகையிரத சேவையொன்றை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன். இதற்குரிய அனுமதிகளும் சம்மந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

அதாவது ஜனாதிபதி உள்ளிட்ட போக்குவரத்து அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியோரினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்கமைய இந்த சேவையை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக எதிர்வரும் யூன் மாதத்திற்கு முன்னர் கொழும்பு- யாழ் சேவை ஆரம்பிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கின்றேன்.



பொது மக்களின் நன்மை கருதியே இந்தச் சேவைகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. ஆகவே இதன்போது சமூதாய சீர்கேடுகள் கலாசார சீரழிவுகள் மற்றும் மோதல்கள் ஆகியவற்றிற்கு இடமளிக்கப்படமாட்டாதென்றும், இருப்பினும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் இடைநடுவில் இறக்கிவிடப்படுவார்கள் என்பதுடன் சட்டரீதியான நடவடிக்கையும் உரிய முறையில் எடுக்கப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார். (எ-6)

## மைத்திரிபாலவுக்கு சந்திரிகா மகுடம்

(கொழும்பு)

நாட்டின் தலைமைத்துவ பதவிக்கு மிகவும் பொருத்தமான நபர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பணத்தை கொடுத்து விலைக்கு வாங்க முடியாத நபர்.

அவர் இந்த நாட்டின் தலைமை பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எதிர்கால ஜனாதிபதி பதவிக்கான நபரை தயார படுத்த நடவடிக்கை எடுத்தேன் என்றார். (எ-11)

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்

☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6961)

## ஞாயிறு திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களும் சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு வரும் 9 ஆம் திகதி புதன்கிழமையிலிருந்து 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நேரக் கட்டுப்பாடு இன்றி தமது சேவையினைவழங்குமாறு யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் ஒன்றியத்தின் செயலாளர் ஞா.சுரேந்தர் அறிவித்துள்ளார்.

மேலும் 13 ஆம் திகதியினை தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழமைபோன்று நிலையங்களை மூடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.(ஏ)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

**அன்னம்மா கணேசபிள்ளை**

(ஓய்வுபெற்ற உப அதிபர்)

எமது பாடசாலை ஆசிரியரான திருமதி தா.கேதீஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி அன்னம்மா கணேசபிள்ளை (ஓய்வுபெற்ற உப அதிபர்) 06.04.2014 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முத்துத்தம்பி மகா வித்தியாலயம். (6090) ஆசிரியர் நலன்புரிச் சங்கம் திருநெல்வேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடந்து முடிந்த மேல், தென் மாகாண சபைத்தேர்தலில் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய 12 பேரும் கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் வைத்து நேற்றைய தினம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

# பிள்ளையார் சிலை உடைப்பு; இந்துமா மன்றம் கண்டனம்

மன்னாரில் தள்ளாடி திருக்கேதீஸ்வரம் வீதியில் அமைந்திருந்த பிள்ளையார் சிலை கடந்த சனிக்கிழமை இரவு விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளமைக்கு அகில இலங்கை இந்துமா மன்ற பொதுச் செயலாளர் மு.கதிர்காமநாதன் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பல வருடங்களாக திருக்கேதீஸ்வரம் வீதியில் பயணிக்கும் பயணிகளால் பக்திசிரத்தையோடு வழிபாடு செய்யப்பட்டு வந்த இவ்விக்கிரகத்தை உடைத்து அழிக்கப்படுவதற்கான காரணங்களை இந்துமா மன்றம் வினவுகிறது. இது தொடர்பாக மன்னார் பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. அவர்களும் வழமை போல விசாரணை செய்யப்படுமென்கிறார்களே தவிர இவ்வாறான மத அழிப்புச் செயல்களுக்கு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இவ்வாறானசெயல்களால் எமது மக்கள் மனம் வெதும்பியுள்ளனர். எனினும்இதுநாட்டுக்கும்கேடு விளைவிக்கும் செயல் என்பதை இந்துமா மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அத்தோடு இதற்கானசட்ட நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ள வேண்டுமென எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டுமெனவும் கோருகின்றோம் என அதில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (2)

# எழுதுமட்டுவாழ் தெற்கிற்கு மின் விநியோகிக்கப்படுமா?

## கிராம மக்கள் காத்திருப்பு

தென்மராட்சி எழுதுமட்டுவாழ் தெற்கு ஜே/333 கிராம சேவையாளர் பகுதிக்குட்பட்டவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் 30 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மின் இணைக்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள் குறிப்பாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் என பலரும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

இன்னும்சிலமாதங்களில்க.பொ.த உயர்தர பரீட்சை இடம் பெறவுள்ளதால் இப்பிரதேசத்திற்கான மின்சார வசதியை விரைவுபடுத்தி வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் சாவகச்சேரி மின்சார நிலையத்திற்கு மக்கள் கோரிக்கை விடுத்தும் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து அப்பிரதேசத்தின் இருளை நீக்க முன்வர வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (2-272)

# வலிகாமம் மேற்கில் சர்வதேச நீர்த்தினம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் ''சர்வ தேச நீர்த்தினம்'' இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணி தொட க்கம் பிற்பகல் 4.30 மணி வரை சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு வேள்ட்விசன் முகாமையாளர் ஐ.மைக்கல், தென்மராட்சி வேள்ட்விசன் முகாமையாளர் அ.கி.றொசைறோ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் நீரின் முக்கியத்துவம் தொடர்பான சிறப்புரைகள் நடைபெறவுள்ளன.

இதன்படி "நீரால் பரவக் கூடிய நோய்களும் தடுப்பு முறைகளும்" எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை தலைவர் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமார், "சமூக சொத்தாக நீர்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இராஜேஸ்வரன் இராஜேஸ் கண்ணன் "நீர்தொடர்பான பிரச்சினைகளும் நீர் முகாமைத்துவமும்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பிரதீபா விபுலன் "சுத்தமான நீர்" எனும் தலைப்பில்சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் ப.சோளன், "வறட்சியும் தணிப்பும்" எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் த.பிரதீபராஜா ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (2)

# சித்திரா பூரணை, சித்திரா குப்த விரதங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டிய தினங்கள்

இந்து மக்களுக்குரிய சித்திரா பூரணை மற்றும் சித்திரா குப்த விரதம் என்பன தொடர்பாக வாக்கியம் மற்றும் திருக்கணிதம் ஆகிய இரு பஞ்சாங்கங்களிடையே உள்ள மாறுபாடுகள் காரணமாக சரியான தினங்கள் தொடர்பான விபரங்களை அகில இலங்கை இந்துமா மன்றமும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு பத்திரிகைகள் மூலம் விபரமாக பொதுமக்களுக்கு அறிவித்திருந்தன.

எனினும் இந்துப் பொதுமக்கள் பலரும் தொலைபேசி மூலம் இவ்விரு விரத தினங்கள் தொடர்பாகவும் சரியான திகதிகள் பற்றிய விபரங்களைக் கோருவதால் திணைக்களம் மீண்டும்குறித்ததினங்களைத்தெரிவு படுத்துகின்றது.

இதன்படி முன்னர் மேற் கொண்ட தீர்மானத்திற்கு அமைய சித்திரா குப்த விரதம் 15.04.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றே அனுஷ்டிக்கப்பட வேண்டும். மேலும் சித்திரா பூரணை விரதம் (சித்திரா பௌர்ணமி) 14.05.2014 ஆம் திகதி புதன்கிழமையன்றே அனுஷ்டிக்கப்பட வேண்டும்என பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (அ)

# மெத்தா நிறுவனத்தின் செயற்கை அவயவங்கள் பொருத்தும் சேவை

செயற்கை அவயவங்கள் பொருத்தும் மெத்தா நிறுவனமானது மன்னார் வைத்தியசாலையை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருவதுடன் கடந்த 5 ஆண்டுகளில் வடகிழக்கில் தனது சேவையை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

இதற்கமைய இதன் சேவைகளை மன்னார், வவுனியா மாவட்ட பயனாளிகள் மன்னார் வைத்தியசாலையில் அமைந்துள்ள இதன் கிளையிலும் யாழ்., கிளிநொச்சி, முல்லை.மாவட்டத்திலுள்ளோரும் நெடுங்கேணி, முழங் காவில் போன்ற எல்லைக்கிராம மக்கள் எதிர்வரும் மே மாதம் தொடக்கம் மாங் குளம் ஏ-9 வீதியில் அமலமரித் தியாகிகள் சபையினரின் (OMI ) நிதிப்பங்களிப்பின் கீழ் இயங்கவுள்ள இதன் கிளையான அமைதித் தென்றல் எனும் கட்டடத்தில் திங்கள் தொடக்கம் சனி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் மற்றும் தென்பகுதி மக்கள் மாகோ புகையிரத சந்தியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள மெத்தா நிறுவன கிளையிலும் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் மெத்தா நிறுவனத்தின் சேவையை தொடர்ந்து பெற விரும்பும் பயனாளிகள் தாம் பாவித்த மெத்தா நிறுவன செயற்கை அவயவங்களை மட்டும் கொண்டு வரும்போது அவற்றை சுலபமாக திருத்தியமைக்க முடியும் எனவும் இந் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.(2)

# வில்பத்து வனப்பகுதிக்கருகில் முஸ்லிம் மக்கள் குடியேற்றம்

## ஆராய செல்கிறதாம் பொதுபல சேனா

மன்னார் மாவட்டம் மறிச்சுக்கட்டி பிரதேசத்தில் வில்பத்து வனப் பகுதிக்கு அருகில் குடியேற்றப்பட்டுள்ள முஸ்லிம் மக்கள் தொடர்பாக ஆராயும் நோக்கில் பொதுபல சேனா அமைப்பு இன்று அங்கு விஜயம் செய்யவுள்ளதாக அதன நிறைவேற்று செயலாளர் டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பின் இந்த விஜயம் வெறும் ஆராயும் நோக்கத்தை மாத் திரம் கொண்டது என அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், வில்பத்து தேசிய வனத்தை அழித்து அமைச்சர் றிசாத் பதியுதீன் சட்டவிரோத நிர்மாணிப்புகளை மேற்கொண்டுள்ளதாக பொதுபல சேனா அமைப்பு குற்றம் சுமத்தி வருகிறது.

இதற்கு எதிராக ஜனாதிபதி உட்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது போனால் தாம் நேரடியாக களத்தில் இறங்க போவதாக அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டிருந்தார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 100 |
| தக்காளி | 40 | 40 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 45 | 40 |
| கோவா | 40 | 20 | 30 | 40 |
| கரட் | 100 | 80 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80-90 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 110 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 30 | 50 | 50 | 80 |
| கறிமிளகாய் | 80 | 80 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 90 | 80 | 90 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 50 | 45 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 120 | 90 | 80 |

# இராசி பலன்

08.04.2014
(பங்குனி 25, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
நவமி முழுவதும்
புனர்பூசம் முற்பகல் 11.10 மணிவரை
இராகுகாலம் 3.07-4.37 மணிவரை
சுபநேரம் 10.37-12.07 மணிவரை
ஸ்ரீராமநவமி

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**இடபம்** செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், தனவரவுண்டு.

**மிதுனம்** கரைந்த சேமிப்பை ஈடுசெய்யும் எண்ணம் உருவாகும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சயன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**சிங்கம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், உறவினரைக்காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும்.

**கன்னி** இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், குடும்ப சுகமுண்டு.

**துலாம்** எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவி செய்ய முன்வரலாம், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுற்றத்தாரின் வருகையுண்டு, சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய பொருட்சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**தனுசு** எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், கையிருப்பில் சிறிது கரையலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குற்றம் கண்டு கூறலாம்.

**மகரம்** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், அபூர்வ சந்திப்புண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, குடும்ப சுகமுண்டு.

**கும்பம்** மறைமுகப் போட்டிகள் மாறும், தேகாரோக்கியம் சீராகும்,குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்,கௌரவமான நாள்.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சியுண்டு, தடைப்பட்ட காரியம் கைகூடும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப பாடப்பிரிவிற்கு விண்ணப்பம் கோரல்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டுக்கான உயர் தரப்பிரிவில் கணித, விஞ்ஞான தொழில்நுட்ப பாடப் பிரிவுகளுக்கு ஆண்,பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் அறிவித்துள்ளார்.




விண்ணப்பிக்கும் மாணவர்கள் உயர் தகைமை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

எனவே, விண்ணப்பப்படிவங்களை கல்லூரியில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அலுலகத்தில் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கடந்த ஆண்டு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு கல்வியமைச்சினால் அனுமதி அளிக்கப்பட்டதையடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் மாணவிகளை இணைத்துக் கொள்வதற்கு பெற்றோரின் விருப்பு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-21)




நன்றி: மிரர்

# கரவெட்டி பிரதேச செயலக சமூகசேவை திணைக்களத்தின் உதவித்திட்டங்கள்

கரவெட்டி பிரதேச செயலகத்தின் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு வடக்கு மாகாண மத்திய சமூக சேவைத்திணைக்களத்தின் உதவியில் கொடுப்பனவு சேவைக்ளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வாய் பேசாத, காது கேட்காதவர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்படும்.

இவ் அடையாள அட்டையை பெற்றுக் கொள்பவர்கள் கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம், மருத்துவச்சான்றிதழ், முத்திரை அளவான இரண்டு புகைப்படங்கள் என்பவற்றுடன் சமுகமளித்தல் வேண்டும்.

பெண் தலைமைத்துவ குடும்பங்களில் சுயதொழில்களை மேற்கொள்வதற்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இக்கொடுப்பனவுக்கு குடும்ப அட்டை, கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கை கடிதம், கணவன் இறப்பு எனின் மரணச்சான்றிதழ் என்பவற்றுடன் சமுகமளித்தல் வேண்டும்.

மாற்று ஆற்றலுடைய குடும்பத்துக்கு வீடமைப்பு தொகைகளாக புதிய வீட்டிற்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வீடு திருத்துவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். இதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே வழங்கப்படும்.

மாற்று ஆற்றலுடையவர்களுக்கு அவர்களது சுய தொழில்களான ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு என்பவற்றிற்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இவை இரண்டிற்கும் விண்ணப்பிக்க கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கை கடிதம், மருத்துவச்சான்றிதழ் என்பவற்றுடன் சமுகமளித்தல் வேண்டும்.

நிரந்தர நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணம் கொடுத்து மருந்து பெற்றுக் கொள்வதற்கான செலவு வழங்கப்படும்.

இவற்றை பெற்றுக்கொள்ள கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கைக் கடிதம், அரச மருந்தகத்தில் பெறப்பட்ட விலைப்பட்டியல், மருத்துவரின் அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பாரிய நோயினால் பாதிக்கப்பட்டு மாதாந்தம் சிகிச்சைக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு செல்பவர்கள் வழமையான வாகனத்தில் பயணிக்காது வாடகை வாகனத்தில் சென்றால் அதற்கான போக்குவரத்து செலவு வழங்கப்படும்.

இதற்கான செலவைப்பெற்றுக்கொள்ள கிராம அலுவலரினால் பெறப்பட்ட கோரிக்கைக் கடிதம், மருத்துவச்சான்றிதழ் என்பவற்றுடன் சமுகமளித்தல் வேண்டும்.

கிராம, பிரதேச மட்டத்தில் முதியோர் சங்கங்களை உருவாக்கி அதன் பதிவுகளை மேற்கொண்டு அதன்மூலம் முதியோர் நலன்களைப் பெற்றுக்கொள்ளல் .

அத்துடன் சமுதாய மட்டத்திலான புனருத்தாரண திட்டத்தின் கீழ் மாற்றுவலுவுள்ளோர்களின் நலன்களை பேணுவதற்காக CBR தொண்டர்களை நியமித்து நலன்களைப் பேணுதல்.

மற்றும் மாற்றுவலுவுடையோர், கணவனை இழந்தோர், சிறுவர்கள், நலிவுற்றோர் போன்றோரை பராமரிக்கும் அல்லது உதவி செய்யும் அமைப்புக்கள் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஒரு வருடம் இயங்கி இருத்தல் வேண்டும். பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை, எதிர்காலத்திட்டம் இவற்றை அடிப்படையாக வைத்து விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

அடுத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பொதுமக்களுக்கு உதவி பெற்றுக் கொடுத்தல், வருடாந்தம் முதியோர், மாற்று ஆற்றலுடையோர் தின விழாவை நடத்துதல் போன்ற சேவைகளை மேற்கொண்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சேவைகளை பெற்றுக் கொள்ள விண்ணப்ப படிவங்களை கரவெட்டி பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மேலதிக தகவல்களை தத்தமது கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (60)

# செல்வாபுரம் கிராமத்தில் டெங்கு விழிப்புணர்வு



(கரணவாய்)

கரணவாய் ஜே/350 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள செல்வாபுரம் கிராமத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறித்த விழிப்புணர்வில் கிராம உத்தியோகத்தர், சுகாதார உத்தியோகத்தர்கள், கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது முன்பள்ளி, பாடசாலை, சனசமூக நிலையம், வீடுகள், கோயில்கள் என பல இடங்களிலும் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்தனர். (2-60)

# ஓய்வு நேரத்தின் பெரும் பகுதியை இளையோர் மைதானத்தில் செலவிட வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன்

தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தின் பெரும் பகுதியை மைதானத்தில் செலவிடும் இளம் சமுதாயத்தினருக்கு சமூகப் பிறழ்வு ஏற்படுவது குறைவு என வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

உடுவில் உதய சூரியன் விளையாட்டு கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்பள்ளி கட்ட நிதிக்காக நடத்தப்பட்ட தாச்சிப் போட்டியின் இறுதிப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமக்குகிடைக்கும்ஓய்வுநேரத்தினைபெறுமதியாக பயன்படுத்தி தமது உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாகப் பேணவேண்டும்.

மைதான நிகழ்ச்சிகளில் ஈடுபடும் இளையோர் சமூகத்தில் சமூகப் பிறழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள்.

அதேவேளை அவர்களால் சமூகத்திற்கு மிகுந்த பயன்கிடைக்கின்றது.

ஒவ்வொரு குழந்தையையும் ஏதாவதொரு விளையாட்டில் ஈடுபாடுடையவர்களாக வளர்த்திட வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு பொற்றோருக்கும் உள்ளதாகவே நான் கருதுகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப் போட்டியில் தையிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டதோடு வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

மேலும் இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு சுன்னாக பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஷ், வலி. தெற்கு சுன்னாகம் இளைஞர் சம்மேளன தலைவர் செ.விஜிதரன், வலி. தெற்கு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் வல்லவகுமார் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-23)

# சமூகத்திற்காக உழைத்தவர்களின் பெயர்கள் வீதிகளுக்கு சூட்டப்பட்டன

(கரணவாய்)

பருத்தித்துறை திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது சமூக மேம்பாட்டுக்காக உழைத்தவர்களை நினைவு கூரும் வகையில் அவர்களது பெயர்களை திக்கம் வீதிகளுக்கு சூட்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய பருத்தித்துறை பிரதேச சபையின் அனுமதியுடன் வீதிகளுக்கு சூட்டப்பட்டுள்ளன. இதன்படி திக்கம் பள்ளந்தெனிய வீதிக்கு அமரர் க.இராஜகோபால் வீதி ,திக்கம் பனிக்கர் கோயில் வீதிக்கு அமரர் யூரி மாணிக்கம் வீதி, திக்கம் பேச்சியம்மன் கோயில் வீதிக்கு அமரர் சி.கணேசமூர்த்தி வீதி, திக்கம் பாடசாலை வீதிக்கு அமரர் ஆ.பொன்னையா வீதி, திக்கம் மைதானத்திற்கு அமரர் ஆ.ஜெகதீஸ்வரன் வீதி, திக்கம் கல்லாண்டி வீதிக்கு அமரர் க.வேலும் மயிலும் வீதி, திக்கம் நீர்வளைப் பிள்ளையார் வீதிக்கு அமரர் திக்கம் செல்லையாப்பிள்ளை வீதி, மற்றும் திக்கம் பிரதான வீதிக்கு சேமன் சச்சிதானந்தம் வீதி என பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.(2-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவயோக சுவாமிகள் ஐம்பதாவது குருபூசை



**இடம் : நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம்**

**காலம் : 10.04.2014 (வியாழக்கிழமை) மாலை 4.30 மணி.**

அமெரிக்காவிலிருந்து கடந்த பதினேழு வருடங்களுக்கு முன்னர் உலக யாத்திரைக்காகப் புறப்பட்ட யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளது திருவுருவ விக்கிரகம் ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளை வலம் வந்த பின்னர் ஆசியாவுக்குள் பிரவேசித்து, சுவாமிகளது ஐம்பதாவது குருபூசை நாளன்று, சுவாமிகள் ஞானநிலை பெற்ற நல்லைக்கந்தன் தேரடியை வந்தடைய திருவருள் கைகூடியுள்ளது.

மாலை 04.30 மணிக்கு சுவாமிகளது ஐம்பொன் திருவுருவவிக்கிரகம் வீதியுலவாக தேரடியிலிருந்து நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தை அடையும். சிறப்பு நிகழ்வாக பூசைவழிபாடுகள், நற்சிந்தனைப்பாடல் ஓதுதல், சிறப்புரைகள், மலர் வெளியீடு என்பன இடம்பெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(6091) அகில இலங்கை இந்து மாமன்றம்.


# பாக்-பங்களாதேஷ் பிரிவு போன்று இலங்கையிலும் நடந்தால் தவறில்லை

## பா.ஜ.கட்சி தமிழகத் தலைவர் தெரிவிப்பு

பாகிஸ்தான் மீது போர் தொடுத்து பங்களாதேஷத்தை பிரித்துக் கொடுத்தது போல் இலங்கையிலும் நடந்தால் அது தவறில்லை என பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்று அவர் அளித்த பேட்டியில் இலங்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு,

இலங்கை தமிழர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு என்னவென்று நினைக்கிறீர்கள்?

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கையில் தான் உள்ளது. தங்களது உரிமையைப் பாதுகாக்கக் கோரி கிழக்கு பாகிஸ்தான் இந்தியாவை அணுகிய போது, 1971ஆம் ஆண்டு பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுத்து பங்களா தேஷத்தைப் பெற்றுக் கொடுத்தது.

அதுபோல, இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து கொடுமைப்படுத்தப்பட்டால், அவர்களது உரிமை மறுக்கப்பட்டால், வேறுவழியில்லாமல் தனிஈழம் வேண்டுமென கோரி அவர்கள் இந்தியாவை நாடினால், பங்களாதேஷம் போல இலங்கையிலும் நடந்தால் அதில் எந்தத் தவறும் இல்லை. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவரகளின உரிமைகள் மீட்கப்படுமா?

நரேந்திரமோடி பிரதமர் ஆகிவிட்டார் என்ற செய்தி கிடைத்ததும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு தன்னை அடக்கிக் கொள்ளும். தமிழக மீனவர்களின் உரிமைகள் தக்கவைக்கப்படும்.

இதேவேளை, இந்தியாவில தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் வாக்குகளை பெறவென வேட்பாளர்கள் பலரும் இலங்கை பிரச்சினையை பிரசார மேடைகளில் பேசி வருவதுடன இலங்கை தமிழர் பிரச்சினையில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர.

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் வெங்கய்யா நாயுடு அண்மையில் கருத்து தெரிவிக்கையில், தனி ஈழத்தை பா.ஜ.க. ஒருபோதும் ஆதரிக்காது என்றார். அப்படி இருக்கையில் பொன்.ராதாகிருஷ்ணனின் இந்த கருத்து சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை பிரச்சினையில் பா.ஜ.க. இரட்டை நிலைப்பாட்டில் இருப்பதை இது காட்டுகிறது. (2)

# மின்னல் தாக்கி இதுவரை ஏழு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் மின்னல் தாக்கி 7 பேர் உயிரிழந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடங்களில் மின்னல் தாக்கத்தினால் 54 தொடக்கம் 58 வரையான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையான காலப்பகுதியில் மின்னல் தாக்கத்தினால் 7 மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், பலர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளதாக அந் நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (2)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1967 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: 35 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L / வியாபாரம், தோட்டம்
தொ.இ: B/1221

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 15 சூரி, செவ் 5இல்
உயரம்: 5'
தகைமை/தொழில: A/L/ அரச தொழில்
தொ.இ: B/1222

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 52 செவ் 4 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: B.Sc, MSc / IT Manager (UK – PR)
தொ.இ: B/1223

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 54.5 செவ் 1 இல்
உயரம்: 5'7".
தகைமை/தொழில்: NCT Civil Engineering / தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தொ.இ: B/1227

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 58.75
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, B.Com, HNDM / வங்கியாளர்
தொ.இ: G/1785

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 64 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc IT / (UK – Work Permit)
தொ.இ: G/1786

பிறப்பு: 1984 கிறிஸ்தவம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA, MA / வங்கியாளர்
தொ.இ: G/1791

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 34.25
தகைமை/தொழில்: A/L / கணக்கு உதவியாளர்
தொ.இ: G/1799

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீ.சி.ரீ (TCT)பல்பொருள் விற்பனை நிலையத்தில்

# புதுமையான சலுகை மழை!

**வாடிக்கையாளர் நலன் கருதி விரிவாக்கம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படும் உங்கள் ரீ.சி.ரீ. பல்பொருள் விற்பனை நிலையத்தில் மலரும் ஜய வருடத்தினை முன்னிட்டு ஏப்ரல் 13 ஆம் நாள் வரை வியாபாரச் சலுகைகள்.**

| இவற்றை வாங்கினால் | இவை இலவசம் |
|---|---|
| 1.Nice-Maam-360g | Chocolate Cream-90g |
| 2.Banana Cream-360g | Chocolate Cream-90g |
| 3.Apple Cream-360g | Chocolate Cream-90g |
| 4.Lemon Puff Maam-200g | Milk shortied-60g |
| 5.Shorties Maam-360g | Milk Biscuits -60g |
| 6.Chocolate Cream-360g | Milk Biscuits-60g |
| 7.Orange Cream Lucky Land-375g | Bourbon-100g |
| 8.Batter Carol Lucky Land-400g | Bourbon-100g |
| 9.Nice Lucky Land-400g | Bourbon-100g |
| 10.Chocolate Cream Lucky land-400g | Bourbon-100g |
| 11.Wafers Lucky Land-500g | Bourbon-100g |
| 12.Marie Master-300g | Marie-100g |
| 13.Choco Rings-300g | Marie-100g |
| 14.Batter Rings-300g | Marie-100g |
| 15.Milk Biscuits Master-325g | Marie-100g |
| 16.Chocolate Cream Maliban-500g | Doubles-100g |
| 17.Chick Bits Maliban-170g | Gold Marie -80g |
| 18.Gold Marie -320g | Gold Marie-80g |
| 19.Orange Cream Maliban | Doubles-110g |
| 20.Custard Cream Maliban-500g | Doubles-110g |
| 21.Cheese Puff Maliban-200g | Gold Marie-80g |
| 22.Golden Nuggets Edna-140g | Choco nut-50g |
| 23.Dreams Chocolate Edna -100g | Choco nut -50g |
| 24.Check Mate Edna-200g | Choco nut -90g |
| 25.Chocolate Cream Munchee-400g | Hawaian cookies-100g |
| 26.Chocolate Marie Munchee-400g | Hawaian cookies-100g |
| 27.Ginger Munchee-400g | Hawaian cookies-100g |
| 28.Wafers kist-400g | Chocolate Cream-100g |
| 29.Mineral Water Mount Spring 1.5L | Mineral Water-1.5L |
| 30.Fortune Sun Flower Oil-1L | Soya-50g (3) |
| 31.Fortune Sun Flower Oil-2L | Fortune Coconut Oil-200ml |
| 32.Prima Special Pack Noodles- 345g | Kottume-80g |
| 33.Ruhunu Special Noodles | Soya-65g |
| 34.Delmege Noodles-82g (3) | Noodles-82g |
| 35.Seven Star Atta-1Kg(2) | Atta- 1Kg |
| 36.Ruhunu Soya-65g(3) | Soya(1) -65g |
| 37.Samaposha-200g(2) | Samaposha -80g(1) |
| 38.Lanka Soya-90g(2) | Soya(1) -50g |
| 39.Delmege Soya-90g(2) | Soya(1) -60g |
| 40.Pringles Original-161g | Prigles-161g |
| 41.Watawala Tea -400g | Tea-100g |
| 42.Delmege Soya-90g (2) | Salt-400g |
| 43.Rani Soap- (3) | Rani Soap-1 |
| 44.Baby Cheramy-(4) | Cheramy Soap -1 |
| 45.Dettol Cool Soap -(4) | Dettol cool Soap -1 |
| 45.Velvet Soap-(3) | Velvet Soap-1 |
| 47.Natures Secrets Body Lotion-225ml | Face Wash-100ml |
| 48.Natures Secrets | Face Wash-100ml |
| 49.Natures Secrets Sunscreen lotion | Face Wash-100ml |
| 50.Pearlwite Dish Wash | Safeplus –Soap |
| 51.Hivhem Washing Liquid -1L | Multy Wash-500ml |
| 52.Clogard-160g | Clogard-40g |
| 53.Sunlight Soap (5) | Sunlight (1) |
| 54.Sunlight Powder 1Kg | Sunlight Powder-200g |
| 55.Smak/Kist Nector-1L | Smak /Kist-Nector-200ml |
| 56.MD Orange Cordial -750ml | MD Divul kiru-200ml |
| 57.MD Mixed fruit Cordial-750ml | Coconut Vinegar-350ml |
| 58.MD Mango Cordial-750ml | Soya Sauce-190ml |
| 59.MD Mango delight-850ml | Glass |
| 60.MD Orange delight-850ml | MD Tomato Sauce-200g |
| 61.Dettol Hand wash | Lunch box |
| 62.Cinthol Soap(2) | Cinthol Soap(1) |
| 63.Good knight Liqidetor Refill(2) | Good night Refill(1) |
| 64.Good knight Liqidetor Refill(2) | Vapouriser |
| 65.Colin Class Cleaner | Dettol Soap |
| 66.Mortein Cockroah killer-400g | Lysol-200ml |
| 67.Mortein Cockroah killer-400g | Dettol Hand wash |
| 68.Air Wick-675ml | Lysol-200ml |
| 69.Lysol-950ml | Paper Serviettes |
| 70.Dash Dish wash | Sponch(1) |
| 71.Loreal Shampoo-375ml | Conditioner-180ml |
| 72.Loreal Shampoo-360ml | Conditioner-175ml |
| 73. Loreal Shampoo-175ml | Conditioner-65ml |
| 74.Pantien Shampoo-170ml | Conditioner-75ml |
| 75.Ariel Complete+-1Kg | Ariel-200g |
| 76.Garnier Shampoo-180ml | Conditioner-90ml |
| 77.Garnier Shampoo-180ml | Daily fairness moistuises |
| 78.Mabroc Bopf Tea | Cup Free |
| 79.Garnier Shampoo-375ml | Conditioner-180ml |
| 80.Harpic-750ml | Toilet Brush |
| 81.Domex-500ml | Vim Soap-100g |
| 82.Comex-500ml | Gliz Soap |
| 83.Mr.Muscle Tile cleaner-1L | Kitchen cleaner-500ml |
| 84.Nestomalt box-400g | Maggi Noodles-81g |
| 85.Cow & Gate No-III box(2) | Cow & Gate box (1) |
| 86.Cow & Gate No-IV Tin | Cow & Gate box (1) |
| 87.Golden Cow box(2) | Lunch box |
| 88.Nestum-240g | Lunch box |
| 89.Milo-400g | Lunch box |
| 90.Bonlac- Non Fat-400g | Cream cracker-125g |
| 91.Reebonn leave on Silicone Conditioner-100ml | Face wash-30ml |
| 92.MD Jam-485g | MD Source-200g |
| 93.MD Source -400g | Jam-225g |
| 94.Chunky Choc-200g | Fingers-100g |

(சி-6963)

**HACHI BOX FAN 1 இற்கு IRON BOX FREE**

| பொருட்கள் | குறித்த விலை | எமது விலை | சேமிப்பு |
|---|---|---|---|
| 1.Johnsons Baby Soap-50g | 100/- | 75/- | 25/- |
| 2.Johnsons Baby Soap-75g | 155/ | 100/ | 55/- |
| 3.Lux Soap | 76/- | 65/- | 11/ |
| 4.Necto – 2L | 210/- | 185/- | 25/- |
| 5.Orange Barley-2L | 210/- | 185- | 25/- |
| 6.Pepsi -2.25L | 250/- | 225/- | 25/- |
| 7.7 Up -2.5L | 250/- | 225/- | 25/- |
| 8.Fanta -2L | 220/- | 195/- | 25/- |
| 9.Portello- 2L | 220/- | 195/- | 25/- |
| 10.Harpic-500ML | 165/- | 135/- | 30/- |
| 11.Harpic -500Ml Fresh citrus | 170/- | 155/- | 15/- |
| 12.Baby Diapers SoftLove 36Pcs (M) | 1540/- | 1386/- | 154/- |
| 13. Baby Diapers SoftLove 12Pcs (S) | 460/- | 414/- | 46/- |
| 14. Baby Diapers SoftLove 12Pcs (L) | 525/- | 472/- | 53/- |
| 15.SoftLove Smartpant 22Pcs(L) | 1504/- | 1353/60 | 150/40 |
| 16.Delmege Tin fish-420g | 250/- | 170/- | 80/- |
| 17.Ceylonta Tea-400g | 385/- | 350/- | 35/- |
| 18.Maggi Noodles Special pack | 195/- | 145/- | 50/- |
| 19.Master gift Biscuit | 200/- | 180/- | 20/- |
| 20.Pampers 24Pcs (S) | 780/- | 710/- | 70/- |
| 21.Pampers 16Pcs (XL) | 780/- | 710/- | 70/- |
| 22.Pampers 10Pcs (M) | 440/- | 410/- | 30/- |
| 23.Pampers 9Pcs (L) | 440/- | 410/- | 30/- |
| 24.Pampers 7Pcs (XL) | 440/- | 410/- | 30/- |
| 25.Eva Dritex Wings -2 Pack | 210/- | 180/- | 30/- |
| 26.Sorbex Serviettes | 120/- | 85/- | 35/- |
| 27.Turkey Sunflower oil-1L | 590/- | 530/- | 60/- |
| 28.Tastyy Sun flower oil-1l | 575/- | 490/- | 85/- |
| 29.Turkey Sunflower oil-2L | 1100/- | 1040/- | 60/- |
| 30.Turkey Sunflower oil-3L | 1625/- | 1550/- | 75/- |
| 31.Turkey Vegetable oil-3L | 1200/- | 1090/- | 110/- |
| 32.Turkey Vegetable oil-500ml | 250/- | 230/- | 20/- |
| 33.Farleys Rusks | 475/- | 375/- | 100/- |
| 34.Fortune Vegetable oil -3L | 1200/- | 1020/- | 180/- |
| 35.Tastyy Sunflower oil-500ml | 290/- | 265/- | 25/- |
| 36.Tastyy Sunflower oil-2L | 1200/- | 940/- | 260/- |
| 37.Tastyy Vegetable oil-3L | 1150/- | 990/- | 160/- |
| 38.Vegetable Oil -3L | 1100/- | 980/- | 120/- |
| 39.Tastyy Vegetable Oil -2L | 766/- | 690/- | 76/- |
| 40.Gold Winner-500ml | 260/- | 240/- | 20/- |
| 41.Sunquick Passion-840ml | 735/- | 660/- | 75/- |
| 42.Sunquick Fruit cocktail-840ml | 680/- | 610/- | 70/- |
| 43.Sunquick Mango-840ml | 775/- | 697/- | 78/- |
| 44.Sunquick Apple-840ml | 680/- | 610/- | 70/- |
| 45.Sunquick Orange-840ml | 680/- | 610/- | 70/- |
| 46.Sunquick Black Currant-840ml | 845/- | 760/- | 85/- |
| 47.Surfexcel Matic-1Kg | 320/- | 270/- | 50/- |
| 48.Surfexcel -1Kg, Comfort-200ml | 400/- | 375/- | 25/- |
| 49.Black Night Shaving Cream-2Pcs | 240/- | 216/- | 24/- |
| 50.Garniger Men Face Wash | 565/- | 508/- | 57/- |
| 51.Ganiger men moisturiser-50g | 595/- | 538/- | 57/- |
| 52.Garnier men moisturiser-20g | 318/- | 286/- | 32/- |
| 53.Garnier men moisturser | 370/- | 333/- | 37/- |
| 54.Garnier color Natural Cream | 645/- | 580/- | 65/- |
| 55.Enchanteur –Talc-250g | 590/- | 500/- | 90/- |
| 56.Tastyy –Vegetable Oil -1L | 355/- | 330/- | 25/- |
| 57.Dream -21 Washing Liquid 2 ins | 750/- | 650/- | 100/- |
| 58.Tiara Layer Cake-480g | 320/- | 270/- | 50/- |

(கையிருப்பு உள்ளவரை)

இத்துடன் இந்நாட்களில்......

***Commercial Bank Card*** வகைகளுக்குப் புடைவையகம், பான்சியகத்தில் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு ***20%*** விலைக்கழிவு வழங்கப்படும்.

## மேலும் எமது வழமையான சலுகைகள்

- எமது விற்பனை நிலையத்தில் 10000/- க்குமேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு இலவச வாகனவசதி வழங்கப்படுகின்றது. (நிபந்தனைக்கு உட்பட்டது)
- 25000/- க்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்பவருக்கு 500/- GIFT VOUCHER வழங்கப்படுகின்றது.
- மேலே குறிப்பிட்ட எண்ணெய் வகைகளுடன், பால்மா பொருட்கள், காகிதாதி வகைகள் உட்பட 120 இற்கு மேற்பட்ட பொருட்கள் விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

*உங்கள் நுகர்வுத் தேவைகளை ஒரே இடத்தில் நிறைவு செய்யவும், பருவகால சலுகைளுக்கும் முந்துங்கள்!*

*"அறப்பணியே முதற் பணி"*

**ரீ.சி.ரீ பல்பொருள் விற்பனை நிலையம்,**
**527, நாவலர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்**
**T.P.No:-0214451895/0212228025/ 0777511285**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

(கிளிநொச்சி)

வடமாகாண கல்வித்திணைக் களத்தினராலும் கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனையாலும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நடாத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் க.முருகவேள் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விசேட கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் காலை 8.30 முதல் மாலை 5.30 வரை மாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அத்தோடு கரைச்சி கோட்டத் திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்திற்கான செயலமர்வு எதிர் வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளி. வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்தி மண்டபத்தில் காலை 8.30 முதல் மாலை 5.30 வரை இடம்பெறவுள்ளது.

எனவே 10 , 11 ஆம் தரங்களிற்கு மேற்குறித்த பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

பளை, பூநகரி, கண்டாவளை ஆகிய கோட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கான ஆக்கத்திறன் விருத்தி செயலமர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 முதல் மாலை 5.30 வரை கிளி நொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் கணனி வள நிலையத்தில் இடம் பெறவுள்ளது. எனவே குறித்த ஆசிரிய ர்கள் ஆசிரியர் பாடநூல், அகராதி ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி ஆகிய வற்றுடன் சமுகம் அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (9-254)

## நிலக்கடலை விநியோகமும் பயிர்ச் சிகிச்சை முகாமும்

(கிளிநொச்சி)

உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் விதை நிலக் கடலை விநியோகமும் பயிர்ச் சிகிச்சை முகாமும் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கமைய விதை நிலக் கடலை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலக வளாகத்தில் காலை 10 மணிக்கும் பயிர்ச்சிகிச்சை முகாம் முற்பகல் 11 மணிக்கு புழுதியாறு சிவன் கோயில் வளாகத்திலும் கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்தோடு வடமாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

# குமுழமுனை ம.வியின் சஞ்சிகை வெளியீடு

(முல்லைத்தீவு)

குமுழமுனை மகாவித்தியாலயத்தில் குமிழ் ஒளி எனும் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய கேட்போர் கூடத்தில் அதிபர் ம.கமலகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதி தவிசாளர் அன்ரனி ஜெயநாதன், முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கரைச்சி பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபையின் உறுப்பினர்களான சு.ரவிகரன், ஜெனோபர், சிவமோகன், கனக சுந்தரசுவாமி, லிங்கநாதன், திருமதி.கு.மேரிகமலா ஆகியோருடன் ஜனாதிபதியின் முல்லை. மாவட்ட இணைப்பாளர் சி.கனகரத்தினம் போன்றோர் பங்குபற்றவுள்ளனர். (9-267)

# புத்தாண்டு சந்தை

வாழ்வெழுச்சித் திட்டத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் கரைதுறைப் பற்று பிரதேச செயலகமும் இணைந்து புத்தாண்டு சந்தையை நாளை புதன் கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் காலை 9.30 முதல் மாலை 6.30 வரை முல்லைத்தீவு நகர விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ளன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வணிக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். புத்தாண்டு சந்தையில் தரமான உள்ளூர் உற்பத்திகள் மலி வான விலையில் விற்கப்படவுள்ளன. (9-267)

# உள்ளூர் சந்தையில் வெளிமாவட்ட வியாபார ஊடுருவல்

முள்ளியவளை பொதுச் சந்தை வளாகத்தினுள் வெளி மாவட்டத்திலிருந்து வந்து புடைவை வியாபாரம் இடம்பெற்று வருவதனால் தமது புத்தாண்டு வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தை வியாபாரிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

முள்ளியவளை பொதுச் சந்தையின் புனர்நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருவதனால் கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் ஊடாக சந்தை வியாபாரிகளுக்கு மாற்றிடம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், தற்காலிகமாக சந்தை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வெளிமாவட்டத்திலிருந்து வரும் புடைவை வியாபாரிகள் வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டிற்கான வியாபாரத்தினை முன்னெடுக்க சந்தை வளாகத்திலுள்ள புடைவை வியாபாரிகள் முயற்சி செய்து வரும் நிலையில் வெளி மாவட்டத்திலிருந்து வருபவர்கள் புடைவைகளின் தர நிர்ணய விலைகளினை விட குறைவாக விற்பனை செய்வதால் பிரதேச வியாபாரிகள் நட்டமடைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சந்தையினை முள்ளியவளை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மத்தி உதறிக்குடா ஆகிய 6 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறாக அதிக சனத்தொகையானவர்கள் கூடும் இடங்களை இனங்கண்டு வெளிமாவட்ட வியாபாரிகள் அங்கு விற்பனை மேற்கொள்வதை தடுக்க வேண்டுமென பிரதேச வியாபாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து முகாம்களில் வாழ்க்கையை நகர்த்தி தற்போது வங்கிகளில் கடன் பெற்றே தமது தொழில் நடவடிக்கைகளை இங்குள்ள வியாபாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆகவே, கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் பிரதேச வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டு வெளிமாவட்ட வியாபாரிகளின் இத் தொழில் நடவடிக்கையை தடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)




# மாகாண நிர்வாகத்தினுள் மத்திய அரசு தேவையின்றி மூக்கை நுழைக்கின்றது

வடமாகாணத்தின் விவசாய அபிவிருத்திக்கென மாகாண விவசாய அமைச்சு உள்ளது. இவ் அமைச்சின் கீழ் ஒரு மாகாண விவசாயப் பணிப்பாளரும் ஐந்து பிரதி விவசாயப் பணிப்பாளர்களும் உள்ளார்கள.

மாவட்டங்களின் விவசாய விரிவாக்கத்துக்கெனப் பிரதிவிவசாயப் பணிப்பாளர்கள் இருக்கும்போது, இவர்களுக்கு மேலதிகமாக மாவட்டச் செயலகங்களில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களை மத்திய அரசாங்கம் நியமித்துள்ளமை வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயற்பாட்டு உரிமைகளைப் பறிக்கின்ற, மாகாண நிர்வாகத்துக்கு இடையூறு செய்கின்ற ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா மாவட்டப் பிரதி விவசாயப் பணிமனை வளாகத்தில் கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்னாசிப் பழச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இடம்பெற்ற வயல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற் குறித்தவாறு சாடியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அன்னாசிப்பழம் தென் இலங்கையில்தான் விளையும் என்கின்ற நிலைமாறி, தற்போது வவுனியாவிலும் விளைவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் அதிகளவில் அன்னாசி பயிரிடப்படும் கம்பஹா, குருநாகல பகுதிகளில் விளையும் அன்னாசப்பழங்களைவிட வவுனியாவில் விளைந்துள்ள பழங்கள் இனிப்புச் சுவை கூடுதலாக உள்ளன. பளை, இயக்கச்சி போன்ற பிரதேசங்கள் தென்னை மரங்களிடையே ஊடுபயிராக அன்னாசியை வளர்ப்பதற்குரிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ்வாறாக விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கென எத்தனையோ வாய்ப்புகள் வடமாகாணத்தில் இருந்தபோதும் மத்திய அரச நிர்வாகம் அதற்கு ஒத்துழைப்பதாக இல்லை.

மத்திய அரசாங்கம் பார்த்தீனியம் ஒழிப்பதற்கென யாழ்மாவட்டச் செயலகத்தில் உள்ள விவசாயப் பணிப்பாளருக்கு 3 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளது. அண்மையில் மாகாண விவசாய அமைச்சும் பார்த்தீனியத்தை அழிப்பதற்கு 15 நாள் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. எங்களிடம் பணம் இல்லை.

இந்நிலையில் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களையும், யுவதிகளையும் பயன்படுத்தி, உலக உணவுத் திட்டம் வழங்கிய அரிசியையும் பருப்பையும் அவர்களுக்கு ஊதியமாக வழங்கியே இந்தத் திட்டத்தை நாங்கள் முன்னெடுத்திருந்தோம்.

பார்த்தீனியம் ஒழிப்பதைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு எங்களுடன் இணைந்து செயற்படுமாறு மாவட்ட விவசாயப் பணிப்பாளரை நான் கோரியபோது, இராணுவத்தினரைப் பயன்படுத்தியே தாங்கள் பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்தார்.

மாகாணசபையின் அத்தனை நடவடிக்கைகளிலும் ஏதோ ஒரு வடிவில் மத்திய அரசாங்கமும் இராணுவமும் தலையீடு செய் கிறது.

வட மாகாண சபையின் மூலம் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட்டதாக ஊர் உலகத்துக்குக் காண்பிக்க முயலும் அரசாங்கம் மறுபுறம், மாகாணசபையின் ஊடாக நாம் எமது மக்களுக்குச் செய்யக் கூடிய குறைந்த பட்சப் பணிகளைக் கூட செய்யவிட மால் தலையிடுகிறது.

எமது அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டால் மாத் திரமே இந்தத் தலையீடுகளை இல்லாமல் செய்யலாம்.

அப்போது தான் எமது விவசாயப் பொருளாதாரத்தை எமக்கேற்றவாறு நாம் மேம்படுத்தமுடியும் என மேலும் அவர் எடுத்துக்கூறியுள்ளார். (9-6-250)





கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்காக உருத்திரபுரத்தில் இரணைமுத்து எனும் நவீன அரிசி ஆலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமார், கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து அரிசி ஆலையை திறந்து வைப்பதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அரிசி ஆலையின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஞாபக சக்தி!

ஓர் அமாவாசையன்று ரமேஷ் காமேஷின் வீட்டிற்கு வந்திருந்தான். அன்று ஒரு யோகி காமேஷின் வீட்டிற்கு வந்தார். அந்த யோகியை வணங்கிய ரமேஷ் இரு செப்புக்காசுகளை அவரிடம் தந்துவிட்டு. "ஒன்று என் சார்பிலும், மற்றொன்று என் நண்ப"ன் காமேஷ் சார்பிலுமாக உங்களுக்கு இதை காணிக்கையாக அளிக்கிறேன்!" என்றான்.

அவனை ஆசிர்வதித்த யோகி, "உங்கள் இருவருடைய நட்பும் பாராட்டத்தக்கது. ஆனால் உன் இனி ஒவ்வொரு அமாவாசையும் நீ உன் நண்பனுக்கு ஒரு செப்புக் காசு கொடு! இதனால் உன் நண்பனுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும்! அதேபோல், உன் நண்பனும் உனக்கு ஒவ்வொரு பௌர்ணமியன்றும் ஒரு செப்புக்காசு தர வேண்டும். அத னால் உனக்கும் லாபம் உண்டாகும். ஆனால், செய்ய வேண்டும்" என்று கூறி விட்டுச் சென்றார்.

அடுத்த நாளே, பல நாட்களாக வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் காலங்கழித்த பிரபாகரன் என்ற ஒருவன் திடீரென தனது பழைய பாக்கியை எல்லாருக்கும் திருப்பிக் கொடுத்தான்.

காமேஷ்"க்கும் அவனது பழைய





நண்பன் சார்பில் நீ எனக்குக் கொடுத்த காசைத் திரும்ப அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளாதே! ஒருவருக்கொருவர் இதை ஞாபகப்படுத்தாமல் தாங்களாகவே நினைவில் வைத்துக்கொண்டு கடன் திரும்பக் கிடைத்தது. அதைக் கேள்விப்பட்ட ரமேஷ் யோகியின் ஆசிர்வாதம் பலித்தது என்று எண்ணிக் கொண்டான். ஆனால, பௌர்ணமியன்று காமேஷ் தன் நண்பனுக்கு செப்புக் காசு தர மறந்து போனான்.

யோகியின் சொல்லை மறக்காத ரமேஷ் மட்டும் அமாவாசையன்று காமேஷிற்கு செப்புக்காசை அளித்தான். அதைப் பெற்றுக் கொண்ட காமேஷ், "உனக்கு அந்த யோகி சொன்னது நன்றாக ஞாபகத்தில் இருக்கிறதே!" என்று கேட்டான்.

அதற்கு ரமேஷ், "உனக்கு அதனால் பயன் உண்டாகும் என்று யோகி கூறியிருக்கும்போது நான் தர மறப்பேனா?" என்றான். "சரி தான்! நீ கொடுக்கும் இந்த செப் புக் காசினால்தான் என் கடன் வசூலாயிற்று என்று கூற விரும்புகிறாயா? எனக்கு நல்ல நேரம் என் கடன் திரும்பக் கிடைத்தது" என்றான்.

அதைத் தொடர்ந்து, "எனக்கு உன்னைப் போல் ஞாபக சக்தி கிடையாது. பௌர்ணமியன்று நான் உனக்கு காசு தானம் செய்ய மறந்து விட்டேன்!" என்றான்.

அன்றிரவு, ஒரு பக்காத்திருடன் ஏதோ ஒரு வீட்டில் திருட முயற்சிக்கையில் பிடிபட்டான். பலநாள் திருடனான அவன் அது வரை தான் திருடிய பொருட்களை ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்தான். அவற்றை மீட்ட காவலர்கள் திருட்டுப் பொருட்களை சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்தனர். காமேஷின் திருட்டுப் போன சில நகைகளும் திரும்பக் கிடைத்தன. (தொடரும்)

# 04.2014 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ➢217 - உரோம் பேரரசின் மன்னன் கரகல்லா படுகொலை செய்யப்பட்டான்.
- ➢1767 - தாய்லாந்தின் அயுத்தயா பேரரசு பர்மியரிடம் வீழ்ந்தது.
- ➢1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டமைக்காக தூக்கிலிடப்பட்டான்.
- ➢1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியானாவில் மான்ஸ்ஃபீல்ட் என்ற இடத்தில் கூட்டமைப்பு படைகள் கூட்டுப் படைகளை தோற்கடித்தன.
- ➢1866 - ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக இத்தாலியும் புரூசியாவும் அணி திரண்டன.
- ➢1867 - முதலாவது உலக கண்காட்சி பாரிஸ் நகரில் ஆரம்பமானது.
- ➢1899 - மார்த்தா பிளேஸ் என்பவர் மின் இருக்கையில் மரண தண்டனை பெற்ற முதற் பெண்.
- ➢1919 - பஞ்சாபில் நுழையக்கூடாதென்ற தடையை மீறியதால் மகாத்மா காந்தி டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டார்.
- ➢1929 - டில்லி நடுவண் அரசு கட்டடத்தில் பகத் சிங், மற்றும் பத்துகேஷ்வர் தத் ஆகியோர் துண்டுப் பிரசுரங்களையும் குண்டுகளையும் வீசி தாமாகவே சரணடைந்தனர்.
- ➢1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் பிலிப்பைன்சின் பட்டான் மாநிலத்தைக் கைப்பற்றினர்.
- ➢1950 - இந்தியாவும் பாகிஸ்தானும் லியாக்கட்-நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
- ➢1957 - எகிப்தில் சூயஸ் கால்வாய் மீளத்திறக்கப் பட்டது.
- ➢1973 - சைப்பிரசில் 32 குண்டுவெடிப்புகள் இடம் பெற்றன.
- ➢1985 - போபால் அநர்த்தம்: போபாலில் நச்சு வாயுக் கசிவினால் 2,000 பேருக்கு மேல் கொல்லப் பட்ட நிகழ்வுக்காக இந்தியா யூனியன் கார்பைட் நிறுவனத்துக்கெதிராக வழக்குத் தொடர்ந்தது.
- ➢2004 - சூடான் அரசுக்கும் இரண்டு தீவிரவாத அமைப்புகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.

**பிறப்புகள**

- ➢1911 - மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1997)
- ➢1938 - **கோபி அன்னான், நோபல் பரிசு பெற்ற முன்னாள் ஐக்கிய நாடுகள் அவைப் பொதுச் செயலர்**

**இறப்புகள**

- ➢1857 - மங்கள் பாண்டே, பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படை வீரர் (பி. 1827)
- ➢1931 - எரிக் கார்ல்ஃபெல்ட், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1864)
- ➢1936 - ரொபேர்ட் பாரானி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- ➢1973 - பாப்லோ பிக்காசோ, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் (பி. 1881)
- ➢1984 - பியோத்தர் காப்பிட்சா, நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி. 1894)
- ➢1992 - டானியேல் போவே, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1907)

## கோபி அன்னான்



கோபி அன்னான் 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி கானாவின் குமசியின் கோபேண்ட்ரோஸ் பகுதியில் பிறந்தார். இவரும் இவரது சகோதரியும் இரட்டையர்களாவர். கானா நாட்டின் கலாசாரப்படி இரட்டையர்கள் கௌரவமாகக் கருதப்படுவர்.

கானா நாட்டில ஓர் வழக்கமாக குழந்தைகள் பிறந்த நாளினையே அவர்களுக்கு பெயராகச் சூட்டுவர். அவ்வழக்கப்படியே இவருக்கு **"கோஃபி"** (அதாவது வெள்ளிக்கிழமை அவர்களின் மொழியில்) என்று பெயரிட்டனர்.

ஐக்கிய நாடுகள் அவையின் ஏழாவது செயலாளராக இருந்தவர். ஜனவரி 1, 1997 இல் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோபி அன்னான் டிசெம்பர் 31, 2006 அன்று ஓய்வு பெற்றார்.

2001 இல் அன்னான், ஐக்கிய நாடுகளுக்கு கூட்டாக "ஒரு சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அமைதியான உலகத்திற்காக உழைத்ததற்காக" அமைதிக்கான நோபல் பரிசு, விருது பெற்றார்.

பெப்ரவரி 23, 2012 முதல் 31 ஓகஸ்ட் 2012 வரை, சிரியாவிற்கான ஐ.நா. அரபு லீக் கூட்டு சிறப்பு பிரதிநிதியாக இருந்தார். ஐ.நா. வின் பற்றாக்குறையான பங்களிப்பு குறித்து சலிப்படைந்த கோபி அன்னான் சிறப்பு பிரதிநிதி பதவியில் இருந்து விலகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....எண்ணெய் எதுவும் தேவையில்லையாம். சித்தர்கள் இந்த இலையை சுருளாகச் சுற்றி பாறையில் வைத்து விளக்கெரிப்பார்களாம்.

சித்தர்கள் செய்தது இருக்கட்டும். ஒருவர் அந்த அதிசய இலையைப் பறிக்க, பின்னால் வந்தவர்களும் இலைகளைப் பறிக்க அந்தப் பகுதியிலிருந்த அத்தனை செடிகளும் காலி. அடக்கடவுளே! என்னதான் அபூர்வ இலை என்றாலும் இப்படியா செடிகளை மொட்டையடிப்பது? மனிதனுக்குப் பேராசை அதிகமப்பா!

திடீரென்று ஒரு சறுக்கல். கீழே சிறிய ஓடை ஒன்றில் நீர் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கிறது. எப்படியெல்லாமோ வளைந்து நெளிந்து ஓடி வரும் அதனை "நாகஊற்று" அல்லது "பாம்பு ஊற்று" என்று அழைக்கின்றனர்.

மிகப்பெரிய மரம் ஒன்றினை அணைத்த வண்ணம் ஓடிவரும் இந்த ஊற்று நீர் கீழே அருவியாக விழுகிறது.

இப்பொழுது நாங்கள் வந்த பாதை மூன்றாகப் பிரிகிறது. வலப் பக்கம் ஒரு பாதையும் இடப்பக்கம் ஒரு பாதையும் நேர் பாதையொன்றும் காணப்படுகிறது. நேர் பாதையிலேயே சென்ற எங்கள் முன் பெரியதொரு இயற்கையாய் அமைந்த பாறையொன்று சிவலிங்கமாகக் காட்சி தருகிறது.

அமர்நாத் குகைக்கோயிலில் பனி லிங்கம் உருவாகுமே அதுபோன்று மிகப்பெரிய பாறையொன்று லிங்க வடிவில் அமைந்திருக்க, அதன்மீது உலோகத்தாலான விபூதிப்பட்டை ஒன்றைக் கட்டியிருந்தனர். அதற்குக் கீழே உருத்திராட்ச மாலையொன்றும் அணிவிக்கப்பட்டிருந்தது.

இந்த பாறை லிங்கத்தைப் பெரிய மகாலிங்கம் என்ற பெயரில் வழிபாடு செய்கின்றனர். இதற்கு யாரும் பூசாரி கிடையாது. நாமே அதற்கு மனத்திருப்தியுடன் பூஜை செய்யலாம்.



பெரிய மகாலிங்கம்

மகாலிங்கப் பாறையைச் சுற்றிலும் கருங்கற் பாறைகள் கோட்டை மதில் போல அரணமைத்துள்ளன. எதிரே உள்ள பாறை மீது அமர்ந்த நிலையில் கூட ஐயனைத் தரிசனம் செய்யலாம்.

இந்த மகாலிங்க பாறைக்குப் பின்புறம் 'ரோம விருட்சம்' என்னும் அபூர்வ மரம் ஒன்று தன் வேர்களை விழுதுகளாகப் படர விட்டிருந்தது. அது பார்ப்பதற்குச் சிவபெருமானின் ஜடாமுடியின் தோற்றத்தினை நினைவூட்டுகிறது.

சித்தர் பாடல்கள் ரோம வேங்கை என்று குறிப்பிடப்படும் இந்த மரத்தின் விழுதுகள் கவரிமான் ரோமம் போலவே சடை சடையாய் முழ நீளத்திற்குத் தொங்குமாம். இம் மரத்தின் பட்டையை வெட்டினால் இரத்தம் போலவே பால் வடியுமாம். இந்த இரத்தப்பாலை காயகற்ப மூலிகைச் சாறாக சித்தர்கள் பயன்படுத்தினார்களாம்.

நல்லவேளை, மகாலிங்கத்தின் பின்னால் இருப்பதால் இரத்தம் வருகிறதா என்று யாரும் வெட்டி சோதனை செய்து பார்க்கவில்லை.

இதைப்போன்ற ரோம வேங்கை மரங்கள் இரட்டை மகாலிங்கத்தின் பின்புறச் சரிவிலும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பக்கத்தில் வளர்ந்திருந்த உயரமான மரத்தின் கிளையில் மணி ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. சிவலிங்கத்தின் எதிரே சூலம் ஒன்றும் நாட்டப்பட்டிருந்தது. இந்தப் பெரிய மகாலிங்கத்திற்கு முன்னும் பின்னும் பக்தர்கள் அமர்ந்து வழிபாடு செய்வதற்கேற்றவாறு இயற்கையாகவே பெரியமேடை போன்ற பாறாங்கற்களும் அமைந்திருந்தது ஆச்சரியமான விடயம். எல்லாவற்றிற்கும் மேலாக அடர்ந்த இந்த நடுக்காட்டில் ஒரு சில பக்தர்களாவது வந்து பூஜை செய்து வழிபட்டுச் செல்கிறார்களே, அதுதான் ஆச்சரியமான விடயம் என்று நான் நினைக்கவும், இதென்ன பிரமாதம், பகலில் வந்து செல்வதற்கே இப்படி ஆச்சரியப் படுகிறீர்களே! சிவராத்திரி அன்று

## ஆன்மீகம் 86

இங்கு இரவெல்லாம் பக்தர்களும் சித்த சந்நியாசிகளும் தங்கியிருந்து விடிய விடிய பூஜை செய்வார்களே, அதற்கென்ன சொல்கிறீர்கள்? என்று பின்னால் இருந்து ஒரு குரல்.

நான் மனதில் நினைத்ததற்கு மிகப் பொருத்தமாக யார் பதிலளித்தது. திரும்பிப் பார்க்க முயற்சிக்கிறேன். அருகிலிருந்த பாறைகளில் அமர்ந்திருந்த பக்தர் கூட்டம் பதில் சொன்னவரை மறைத்திருந்தது.

பகலிலேயே பத்து பேர் கொண்ட குழுவே தனித்து வருவது பயம் தரும் விடயம். எவ்வளவுதான் துணை இருந்தாலும் காட்டு மிருகங்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் இந்தப் பகுதியில் மின் விளக்கு வெளிச்சம்கூட இல்லாமல் வெறும் அகல் விளக்குகளின் வெளிச்சத்தில் இரவு முழுவதும் இங்கு அமர்ந்து பூஜிப்பது என்பது சாதாரணமான விடயமா என்ன?

மனதிற்குள் பயம் எட்டிப் பார்த்தது.

அப்பப்பா! நினைத்துப் பார்க்கவே பயங்கரமான விடயத்தை நடத்திக் காட்டும் பக்தர்களின் மன உறுதியை என்னென்பது.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

## 05

...ஒரு கலைஞனை உணரவோ உணர்த்தவோ முடியாத ஊமைத்தனம்.

என்னதான் ஏற்றினாலும் நம் தீபங்கள் திருவண்ணாமலைக்கு மேல் தெரிவதில்லை.

உங்கள் ஆற்றலுக்கு நீங்கள் இருந்து வருகிற உயரம் சரி. ஆனால் தெரிந்திருக்க வேண்டிய உயரம் இது இல்லை.

என்னவோ வாயில் வராத பெயர்களையெல்லாம் வரிசைப் படுத்துகிறார்களே- மார்லன் பிராண்டோ, கிரிகிரிபெக், ரிச்சர்ட் பர்ட்டன், ஓமர் ஷெரீப், சார்லஸ் பிரான்சன், சீன் கானரி, ஒலிவியாடி ஹவில்லாண்ட்.

இவர்களையெல்லாம் விட எங்கள் இனிய கலைஞனே! நீங்கள் எத்தனை மில்லிகிராம் எடை குறைந்தீர்கள்?

அவர்களுக்கெல்லாம் இல்லாத சில ஆற்றல் உங்களுக்குண்டு.

இன்று ஓரளவு விவரம் தெரிந்த பிறகும்கூட வியந்துதான் நிற்கிறேன்.

தனக்கொரு இமேஜ் என்ற எல்லை கட்டிக்கொள்ளாமல் குரூபியாய், தொழுநோயாளியாய், விழியிழந்தவராய், மூத்துச் சிதைந்த முதியவராய்; குடிகாரனாய், கொள்ளைக்காரனாய் அத்தனை பாத்திரங்களையும் ஏற்கத் துணிந்த உங்கள் ஆண்மையை வியக்கிறேன்.

மேல்நாடுகளில் ஒரு பாத்திரம் நடிக்க ஓராண்டு ஈராண்டு ஒத்திகை பார்ப்பார்களாம்.

எந்தப் பாத்திரத்துக்கும் ஒத்திகை தேவையில்லாத உங்கள் உன்னதம் கண்டு வியக்கிறேன்.

எந்த மனிதனைப் பார்த்தாலும் அவனை மனதுக்குள் சேமித்து வைத்து- தேவைப்பட்டபோது எடுத்துச் செலவழிக்கிறீர்களே! அந்த வித்தையை அறிந்து வியக்கிறேன்.

இரண்டு மூன்று சிரிப்புகளை ஒட்ட வைத்து சிரிப்பில் புதிய கலவைகளைக் கண்டுபிடித்தவர் நீங்கள்



## சிவாஜிகணேசன்

என்று வியக்கிறேன்.

எங்கள் தலைமுறையில் இத்தனை பேராற்றல் கொண்ட ஒரு மாபெரும் கலைஞனுக்கு உரிய உயரம் ஏன் மறுக்கப்பட்டது?

ஒருவேளை நீங்கள் [illegible] காக மட்டுமே உபயோகப்படுத்தப் பட்டதுதானா?

குணச்சித்திரத்தில் மூன்று வகையான பாத்திரங்கள் உண்டு.

வட்டாரப் பாத்திரங்கள், சமகாலப் பாத்திரங்கள், உலகப் பாத்திரங்கள்.

முதல் இரண்டு பாத்திரங்களாய் நீங்கள் வார்க்கப்பட்டீர்கள்; வாழ்ந்து காட்டினீர்கள்.

முழுநீளப் படத்திற்கும் உலகப் பாத்திரங்கள் ஏற்று நீங்கள் உயர்ந்திருக்க வேண்டாமா?

யார் பிழை அது?

கலையின் பிழையா?

கதையின் பிழையா?

காலத்தின் பிழையா?

உலக சமுத்திரங்களில் கலந்து, சமுத்திரத்தையே கடைய வேண்டிய நதியை எங்கள் சுய நலத்துக்காக சின்னச் சின்னப் பாத்திரங்களில் சிறை வைத்து விட்டோமா?

இன்னொன்று.

அரசியல் இருக்கிறதே அரசியல்! அது உங்கள் அங்க வஸ்திரம்.

அங்கவஸ்திரமே ஆடை என்று கருதிக் கொண்டிருக்கும் விபத்திலிருந்து உங்களால் விடுபட முடியவில்லையே.

இதுவரை பதவியால் நீங்களோ, உங்களால் பதவியோ பயன்பெற்றதாய் ஆவணக் கிடங்கில் ஆதாரம் இல்லையே.

உங்கள் ஆற்றல், உங்கள் புகழ், உங்கள் செல்வம், உங்கள் அனு[illegible] எல்லாவற்றையும் நீங்கள்



முதலீடு செய்ய வேண்டிய இடம் ஒரு கட்சி அல்ல.

நீங்கள் தொடங்கியிருக்க வேண்டியது ஒரு சிவாஜிகணேசன் பல்கலைக்கழகமே தவிர, கலந்து கலந்து கரைந்து போகும் ஒரு கட்சி அல்ல.

செல்லுலாய்டு பிம்பங்களுக்கு 50 வருடங்களுக்கு மேல் ஆயுள் இருக்குமா என்பது ஐயப்பாடு- அதன்பிறகு உங்கள் பேராற்றலின் பேர்சொல்லத்தக்க ஆய்வுகளோ அடையாளங்களோ வேண்டாமா?

ரஜனி கட்டியிருக்கும் ராகவேந்திரா திருமண மண்டபத் திறப்பு விழாவுக்கு வந்திருந்தீர்கள்.

அந்த விழாவில் நீங்கள் உட்பட எல்லோரும் சிரித்துக் கொண்டிருந்தீர்கள். ஆனால் நான் மட்டும் உங்களுக்காக அழுது கொண்டிருந்தேன்.

உங்கள் தேக்குமர தேகம் கொஞ்சம் தேய்ந்திருந்தது.

உடல்நலம் காத்து வாருங்கள்- எங்கள் செல்வம் நீங்கள்.

மீண்டும் சொல்கிறேன்:

மனோரஞ்சிதம் நீங்கள்.

உங்களைக் காத்துக் கொள்ள எதற்கு ஒரு கருவாட்டுக் கூடை?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு வெளியே நடைபெறும் விசாரணைக்கு சாட்சியமளிப்போர் மீது கடும் நடவடிக்கை

## அமைச்சர் கெஹலிய கடும் எச்சரிக்கை



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை விசாரணைகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கமுடியாது. அத்துடன் நாட்டிற்கு வெளியே நடத்தப்படவுள்ள சர்வதேச விசாரணைகளுக்கு சாட்சியமளிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் அமைப்பில் சாட்சியமளிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசேட நிபுணர் குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்த உள்ளார்.

மூவர் அடங்கிய இந்த விசாரணைக் குழுவினர் எதிர்வரும் மே மாதத்தில் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த சர்வதேச விசாரணைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நாட்டுக்கு வெளியே நடத்தப்படவுள்ள சர்வதேச விசாரணைகளுக்கு சாட்சியமளிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச விசாரணைகளில் பங்கேற்று சாட்சியமளிப்பதானது அரசியல் சாசனத்திற்கு முரணானது. சர்வதேச விசாரணைகளின் மூலம் நாட்டின் இறைமை பாதிக்கப்படக் கூடும்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை விசாரணைகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க முடியாது.

நாட்டின் அரசியல் சாசனத்தைப் பேணிப் பாதுகாப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை உள்ளிட்ட 60 பேர் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை விசேட நிபுணர் குழுவின் விசாரணைகளில் சாட்சியமளிக்க உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டிருந்ததாக தெரிய வருகின்றது. (2)

# நாட்டின் பல பகுதிகளில் கடும் வரட்சி நிலவுகிறது

## வடக்கின் விவசாயம் பாதிப்பு

இலங்கையின் பல பகுதிகளில் கடும் வறட்சி நிலவுவதாக காலநிலை அவதான நிலையம் அறிவித்திருக்கின்றது.

வட மாகாணத்தில் வவுனியாவில் அதிகூடிய வெப்ப நிலைமையாக 40 டிகிரி வெப்பம் பதிவாகியிருப்பதாக காலநிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் எஸ்.ஆர்.ஜயசேகர கூறியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ் வருடம் பல விவசாய மாவட்டங்கள் கூடுதலான வறட்சியை எதிர்நோக்கியுள்ளது.

வவுனியா, மன்னார், அனுராதபுரம், பொலனறுவை, குருணாகலை, புத்தளம், மொனராகலை ஆகிய மாவட்டங்கள் வறட்சியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கிறன.

இதேவேளை, இலங்கையின் வடக்கு கிழக்கு உட்பட பல இடங்களில் கடந்த 5ஆம் திகதி முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் சூரியன் கடும் வெப்பத்துடன் உச்சம் கொண்டிருக்கும்.

தற்போதைய வறட்சி காரணமாக வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் விவசாயம் ஸ்தம்பித நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக கொழும்பு பல்கலைக் கழக பூகோள பிரிவு பேராசிரியர் எஸ்.அன்ரனி நோபர்ட் கூறியிருக்கின்றார்.

பூகோளம் வெப்பமடைவதாலும், சூரியனில் இருந்து திடீரென வெப்ப ஒளிவட்டம் தோன்றி வெப்பத்தை அதிக அளவில் வெளியிட்டிருப்பதனாலும், கூடிய வெப்ப நிலைமை அடுத்த சில வருடங்களுக்குத் தொடர்ந்து நிலவும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

வடபகுதி நிலைமை குறித்து கருத்து வெளியிட்ட வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன்,

வட மாகாணம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில், உட்கட்டமைப்புக்கள் சிதைவடைந்துள்ளதுடன், நிதியூட்டம் குறைந்த பிரதேசமாகவும் திகழும் நிலையில் இயற்கையின் பாதிப்பாக கடும் வறட்சியையும் எதிர் நேக்கியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இம்முறை வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 91 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், வறட்சி காரணமாக 64 ஆயிரம் ஹெக்டேயரில் மாத்திரமே நெல் பயிரிடப்பட்டது.

அதிலும் வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக அரைவாசியிலேயே நெல் உற்பத்தியைப் பெற முடிந்தது.

இரணைமடு குளத்தின் கீழ் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சிறுபோகம் செய்வதுண்டு. ஆனால் குளத்தில் நீர் இல்லாத காரணத்தினால் அதன் பத்தில் ஒரு பங்காகிய 800 ஏக்கரில் மாத்திரமே சிறுபோகத்தில் நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்த கால போகத்திற்குத் தேவையான விதைநெல் உற்பத்திக்காகவே இந்த முயற்சி முக்கியமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

வறட்சியினால் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இதற்கென அரசாங்கம் மாவட்டம் ஒன்றிற்கு ஒரு மில்லியன் ரூபா நிதியை அரசு ஒதுக்கியிருப்பதாகவும், இந்த நிதியைப் பயன்படுத்தி வினைத்திறன் மிக்க வகையில் குடிநீர் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு மாகாண சபையை அதிகாரிகள் கலந்து ஆலோசிக்கவோ இணைந்து செயற்படவோ இதுவரையில் முன்வரவில்லை என்றும் மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் கூறினார். (2)

## திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை–சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம், திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு நடத்தும் திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பாலர் பிரிவில் தரம் 1, 2 மாணவர்களுக்கும் கீழ்ப்பிரிவில் தரம் 3,4 மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ள இப் போட்டிக்கான பாடவிதானம், பாலர் பிரிவிற்குரிய திருமுறைகளாக ''மாசில் வீணையும்...'', ''சொற்றுணை வேதியன்...'' ஆகிய இரண்டு தேவாரங்களும் கீழ்ப்பிரிவிற்கு ''கூற்றாயினவாறு...'', ''நிலைபெறுமா எண்ணுதியேல்....'' ஆகிய இரண்டு தேவாரங்களையும் மனனம் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிக்கு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். போட்டிக் கட்டணமாக ஐம்பது ரூபா செலுத்த வேண்டும்.

இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அன்று நடைபெறும். மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம் என கழகத்தின் உதவிப் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.




யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வசந்தபுர கிராமத்தின் சனசமூக நிலையத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் மற்றும் புத்தக இறாக்கை என்பன யாழ்.நகர் மைய ரோட்டராக்ட் கழகத்தினால் அண்மையில் வழங்கப்பட்டபோது... (படம் மானிப்பாய் செய்தியாளர்)

# வடக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கறுப்பு, வெள்ளை இனத்தவர்களிடையேயான பிரச்சினையை தீர்க்க முடியாது இன்று வரை புரையோடிப்போயுள்ள நிலையில், தென்னாபிரிக்காவால் எப்படி எமது பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும் என கேள்வியெழுப்பும் ஜே.வி.பி. தமிழ் மக்களின் நெருக்கடிகளைப் பயன்படுத்தி அரசாங்கத் தரப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களை மேற்கொள்வதாகவும் அக்கட்சி குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினையென்பது உள்நாட்டுப் பிரச்சினையாகும். இதனை நாமே தீர்க்க வேண்டும். கடந்த கால ஆட்சியாளர்களும் இப்பிரச்சினையை சர்வதேசமயமாக்கி நோர்வே, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் எமது பிரச்சினையில் தலையிடும் நிலைமையை உருவாக்கின.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் இப் பிரச்சினையை சர்வதேசமயமாக்கிவிட்டது.

யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கழிந்துவிட்டது. ஆனால், இன்றுவரை வடமாகாண மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் மீள்குடியேற்றப்படவில்லை.

அம்மக்களுக்கு சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் வழங்கப்படவில்லை. எனவே தான் சர்வதேச நாடுகள் தலையிடுகின்றன. அதற்கான கதவுகளை அரசாங்கமே திறந்து விட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை ஒரு தேசிய இனமாக கருதி கொடுக்க வேண்டியதை கொடுங்கள்

## செல்வராசா எம்.பி.அரசிடம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

**கீரியும் பாம்புமாக இருக்கும் இந்தியாவும் பாகிஸ்தானும் ஜெனீவா தீர்மானத்தில் ஒற்றுமையுடன் செயற்பட்டமை, இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் இந்தியா செய்த மாபெரும் துரோகமாகும் என மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா தெரிவித்துள்ளார்.**

வெல்லாவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட தும்பங்கேணி பிரதேச மக்களின் குறைநிறைகளை கேட்டறிந்து தீர்வு வழங்கும் மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொணடு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவினால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஜெனீவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு இந்திய அரசாங்கம் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் ஆதரித்து வாக்களித்திருந்தது. ஆனால் இம்முறை அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு இந்திய அரசாங்கம் நடுநிலைமையாக இருந்து ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் ஏமாற்றிவிட்டது.

இந்தியா தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தமிழ்மக்களின் நெஞ்சங்களை மறந்து செயற்பட்டதோடு இனிவரும் காலங்களிலும் தமிழ் மக்களுக்கான எந்தத்தீர்வையும் முன்வைக்காது என்பது இதிலிருந்து தெரியவருகின்றது.

சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவும் சர்வதேசம் இலங்கை வாழ் தமிழ்மக்களிடத்தே கொண்டிருக்கும் அசையாத நம்பிக்கை காரணமாகவும், பாகிஸ்தானின் கோரிக்கைகள் அந்த அரங்கிலே தோற்கடிக்கப்பட்டன.

பாகிஸ்தானுக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள்தான் இந்த இந்திய அரசாங்கம். பாகிஸ்தானின கோரிக்கைக்கு துணைபோன இந்தியா நடுநிலைமை வகித்திருக்க வேண்டிய தேவை இல்லை. ஏனென்றால் பாகிஸ்தானின் கோரிக்கைக்கு செவிமடுத்த இந்தியா, நடுநிலைமை வகித்ததன் காரணம் என்ன என்று புரியாதவர்களாக இலங்கையிலே வாழ் தமிழர்கள் எண்ணிக்கொண்டு இருக்கின்றார்கள் என இந்தியா நினைக்கின்றது. அவ்வளவிற்கு இலங்கைத் தமிழர்கள் முட்டாள்கள் அல்ல என்பதனை இந்தியா உணர வேண்டும்.

எது எப்படி இருப்பினும் தமிழர்களின் பிரச்சினையில் மேற்கத தேய நாடுகள், ஐரோப்பா ஆகிய நாடுகள என்றும் எமக்காக குரல் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன என்ற நம்பிக்கை மட்டும் எம்மிடம் இருக்கின்றது. எமக்கான இறுதித்தீர்வு என்றோ ஒருநாள் கிடைத்தே தீரும். அது கிடைக்கும் வரைக்கும் எமது போராட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

அரசாங்கத்தினால் இலங்கை வாழ் தமிழர்கள் அன்றும் இன்றும் இம்சிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதனை உலகறியச் செய்தது நமது கட்சியே.

ஜனநாயகம் தெரியாதவர்கள் ஜனநாயகத்தினை அறிந்த பின்னர் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்பதனை அவர்களைப் பார்த்து கேட்க விரும்புகின்றேன்.

இந்த நாட்டிலே மாறிமாறி வந்த அரசாங்கங்கள் தமிழ்மக்களை அன்றிருந்து இன்று வரைக்கும் ஏமாற்றிக்கொண்டுதான் வந்தார்களே தவிர எந்தவிதமான நல்லவிடயங்களையும் இதுவரைக்கும் தமிழ்மக்களுக்கு செய்யவில்லை என்பது மாத்திரம்தான் உண்மை.

இந்த நாட்டிலே இதுவரைக்கும் அதிகாரப்பரவலாக்கல் நடைபெற்றிருந்தால் புரையோடிப்போயிருந்த யுத்தம் நடைபெற்றிருக்க முடியாது. அதுமாத்திரமல்ல இலட்சக் கணக்கான விலையுயர்ந்த உயிர்களையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும், உறவுகளையும் இழந்திருக்கமாட்டோம்.

அரசாங்கம் இந்த நாட்டிலே தமிழர்களையும் ஒரு தேசிய இனமாகக்கருதி அவர்களுக்கு கொடுக்க வேண்டியவற்றை கொடுத்திருந்தால் தமிழர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது.

தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் குடியேற்றங்களை அமைத்து கலப்பினை ஏற்படுத்த நினைக்கின்றார்கள். இதனை எதிர்த்தவர்கள் யார்? இலங்கை அரசாங்கத்தில் இருக்கும் எந்த தமிழ் அரசியல்வாதிகள் எதிர்த்தார்கள்? அவர்களுக்கு தமிழ்மக்கள் எப்படிப்போனாலும் பாரவாயில்லை. அவர்கள் மாத்திரம சகல சுகபோகங்களையும் அனுபவித்தால் போதும் என்றுதான் அவர்கள் அரசியல் செய்கின்றார்கள்.

இன்று இவர்கள் தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களை நோக்கி ஓடிவருகின்றார்கள். எதற்காக ஓடிவருகின்றார்கள் என்பதனை நீங்கள் ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருத்தல் மிகமிக அவசியமானதொன்றாகும்.

இன்றைய காலகட்டத்தில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்கள் எல்லாம் வேற்று இனத்தவர்களைக் கொண்டு வந்து குடியேற்றி நிலங்களை அபகரிக்கின்றார்கள். இதற்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் என்றால் எங்களைத்தவிர வேறெந்த அரசியல்வாதிகளும் இல்லை என்பது தான் உண்மை எனவும் கூறினார். (2)

## அரசின் தடைப்பட்டியலில் இந்தியாவில் 32 பேர் உள்ளனர்

இலங்கையில் மீண்டும் விடுதலை புரட்சிக்கு புத்துயிரூட்ட முயற்சிப்பதாக தகவல் கிடைத்ததன் பேரில்,இலங்கை அரசு கடந்த வாரம் விடுதலை புலிகள் இயக்கம் மற்றும் 15 தமிழ் அமைப்புகளுக்கு தடை விதித்தது. அவர்களுடன் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் இலங்கை நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

தடை செய்யப்பட்ட அமைப்புகளில் உள்ள 424 நபர்களின் பட்டியல் இலங்கை அரச வர்த்தமானியில் வெளியிட்டது. அவர்களில் 32 பேர் தற்போது இந்தியாவில் வசிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

32 பேர்களில் 6 பேரின் இந்திய முகவரி மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டியலில் உள்ள ஏனையவர்கள் தற்போது அவுஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, மலேசியா, நெதர்லாந்து, நோர்வே, சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, பரித்தானியா மற்றும் இலங்கையில் வசிக்கிறார்கள்.

அவர்கள் அனைவரும் இலங்கையை சேர்ந்தவர்கள் என்றும், அவர்களை கைது செய்ய சர்வதேச பொலிஸாருக்கு ஏற்கனவே அறிக்கை அனுப்பப்பட்டு விட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அல்லது குழுக்களை தற்போது தடை செய்யப்பட்டவர்களாக கருத முடியாது.

இது தொடர்பாக இலங்கை அரசு பாராளுமன்றத்தில், அவர்களை தடை செய்ய சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்றும் இலங்கை அதிகாரி ஒருவர் கூறினார். (2)

## தமிழ் அமைப்புக்களின் தடைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது

### இலங்கை சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள தடை தீர்மானத்திற்கு எதிராக புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளினால் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ள முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழீழ விடுதலை புலிகள் மற்றும சர்வதேச நாடுகளில் இருந்து அந்த அமைப்பிற்கு ஆதரவு வழங்கும் குழுக்களை தடை செய்ய அரசாங்கம் மேறகொண்ட தீர்மானத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் சில தெரிவித்துள்ளன.

எனினும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெளிநாடுகளில் செயற்படும் 16 அமைப்புகளை தடைசெய்ய அரசாங்கம் கடந்த தினத்தில் தீர்மானித்தது. 2001 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமையவே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தின் இந்த தீர்மானத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக புலம்பெயர்ந்தோர் அமைப்புகள் பல தெரிவித்துள்ளன.

எனினும் அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை எதிர்ப்பதனால், அதனை இலங்கை நீதிமன்றத்தின் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி மகிந்த ரலபனாவ தெரிவித்துள்ளார். (2)

## வல்லப்பட்டை கடத்தியவர்கள் கைது

(கொழும்பு)

வல்லப்பட்டையை முச்சக்கர வண்டியில் கடத்திச் சென்ற இருவர் வதுரம்ம நகர பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 250 கிராம் வல்லப்பட்டை கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் பத்தேகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்புட்டுள்ளனர். (2)

## தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் சொத்துக்களின் பெறுமதி 25 பில்லியன்

### அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் மொத்த சொத்துக்களின் பெறுமதி 25 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமாகும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் அண்மையில் 16 வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களை தடை செய்திருந்தது.

இந்த அரச சார்பற்ற நிறுவனம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பணம், கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் என பல்வேறு வழிகளில் சொத்துக்கள் காணப்படுகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் சொத்துக்களை நிறுவனத்தின் உறுப்பினர்களது குடும்ப உறுப்பினர்கள் நிர்வாகம் செய்து வருகின்றனர்.

போர் இடம்பெற்ற காலத்தில் மக்களுக்கு உதவிகளை வழங்கும் போர்வையில் பணம் திரட்டி அரச சார்பற்ற நிறுவனங்கள் சொத்துக்களை பெருக்கிக் கொண்டுள்ளன எனவும் புலிகள் அமைப்பை மீள இயங்கச் செய்ய இந்த அமைப்புக்கள் முயறசிக்கின்றன எனவும் அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)



பொலிகண்டி மருதாம் புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய புதிய வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் ஆலய பிரதம குரு ச.வியித்தியநாதக் குருக்களின் தலைமையில் இடம் பெற்ற போது....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை எதனை வெளிப்படுத்துகிறது...?

ஐ.நா.பாதுகாப்புச் சபையின், 1373 ஆவது தீர்மானத்துக்கு அமைய இலங்கை அரசாங்கமும் வெளிநாடுகளில் செயற்படும் பயங்கரவாத அமைப்புகள் என்ற பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.



இந்தப் பட்டியலில் விடுதலைப் புலிகள் இயக்கம், புலம்பெயர் தமிழர் அமைப்புகள் என மொத்தம் 16 அமைப்புக்களை இலங்கை அரசாங்கம் தடை செய்யப்பட்டவையாக அறிவித்துள்ளது.

போரின் போது கூட அரசாங்கம் விடுதலைப் புலிகளை தேசிய அளவில் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததே தவிர, சர்வதேச அளவுக்கு அதனை விரிவாக்க எத்தனித்திருக்கவில்லை.

அப்போது கூட அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதுதான் கவனம் செலுத்தியிருந்தது.

புலம்பெயர் அமைப்புகளை அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை.

ஆனால், இப்போது விடுதலைப் புலிகள் சார்பு அமைப்புகளான புலம்பெயர் தமிழர் அமைப்புகள் அனைத்தையும் தடை செய்யப்பட்ட அமைப்புகளின்பட்டியலுக்குள்கொண்டு வந்துள்ளது அரசாங்கம்.

அதுவும் ஜெனிவாவில் இலங்கைக்கெதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஒரு சில நாட்களுக்குள் இது நடந்திருப்பது முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகிறது.

ஜெனிவா தீர்மானம் கொண்டு வரப்பட்டது மேற்குலக நாடுகளின் முடிவாக இருந்தாலும் அதற்கு ஒரு வகையில் அழுத்தங்களைக் கொடுப்பதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் காரணமாக இருந்தன என்பதில் சந்தேகமில்லை.

ஜெனிவாவில் கூட்டத் தொடரில் இப்போது இலங்கை அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை உள்ளிட்ட பல அம்மப்புகளின் பிரதிநிதிகள் வெளிப்படையாகவே பங்கேற்றிருந்தனர்.

சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் இதன்போது கடுமையாகவும் வலியுறுத்தியிருந்தனர். இந்தச் சூழலில் ஜெனிவா கூட்டத் தொடர் முடிபுக்கு வந்தவுடன் அரசாங்கம் தடையை விதித்துள்ளது. ஜெனிவா தீர்மானத்தின் எதிரொலியாகவே பரவலாக பார்க்கப்படுகிறது.

ஆனால், ஜெனிவா தீர்மானத்தின் எதிரொலியாகவே புலம் பெயர் தமிழ் அமைப்புகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கருத்துகளை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இது குறித்து கூறுகையில், ஜெனிவா தீர்மானத்துக்கும் இந்தத் தடைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறியிருக்கிறார்.

அதுமட்டுமன்றி இது நீண்ட காலமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சி என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேவேளை இலங்கை மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உயிர் கொடுக்கும் முயற்சிகளில் புலம் பெயர் தமிழ் அமைப்புகள் ஈடுபடுவதாகவும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிக்க முனைவதாகவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த சில வாரங்களாக வடக்கிலும் கிழக்கிலும் நடந்து வரும் புலி வேட்டையுடன் தொடர்பு படுத்தி அவர்களுக்குப் பின்புலமாக இருந்து செயற்படுவதாக குற்றம் சாட்டியே அரசாங்கம் இந்தத் தடையை விதித்திருந்தது.

ஆனால், வெளிநாடுகள் பலவற்றிலும் வலுவாகச் செயற்படும் புலம் பெயர் தமிழ் அமைப்புகள் மீது அரசாங்கம் கொண்டு வந்துள்ள இந்தத் தடைக்கான உண்மையான காரணம் ஜெனிவா தீர்மானத்துக்குப் பதிலடி கொடுப்பதாகவே கருத வைக்கிறது.

எனினும் இந்தத் தடைக்கும் ஜெனிவாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அரசாங்கம் மறுக்கிறது.

அதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்க முனைவதாகக் கூறி தடை விதித்த அரசாங்கம் இன்னொரு வகையில் அதற்கான காரணத்தை நிரூபிக்கத் தவறியுள்ளது.

ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பமாகிய பின்னர் தான் வடக்கில் திடீரென புலிவேட்டை தொடங்கப்பட்டது.

இந்தப் புலி வேட்டை நாளுக்கு நாள் விரிவாக்கப்பட்டும் தேடப்பட்டும் புதியவர்கள் பற்றிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டும் வருகிறது.

ஆனால், இதுவரை சன்மானம் அறிவிக்கப்பட்டு தேடப்பட்டு வரும் கோபி, அப்பன், தேவியன் ஆகிய மூவரில் ஒருவரையேனும் அரசாங்கத்தினால் பிடிக்க முடியவில்லை.

இது ஒரு பக்கத்தில் அரசாங்கத்தின் பாதுகாப்புக்கு சவாலாக அமைந்துள்ளது.

இன்னொரு பக்கத்தில் வடக்கின் பாதுகாப்புக் கெடுபிடிகளை நீடித்துச் செல்வதற்கான முயற்சியாகவும் கருதலாம்.

ஜெனிவா கூட்டத் தொடரின் பின்னர் தொடங்கிய புலி வேட்டை மற்றும் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் முயற்சி என்பனவற்றுடன் தொடர்படுத்தி புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இது நீண்ட கால முயற்சி என்று பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறாயின் குறுகிய காலத்திற்குள் ஏற்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சி பற்றிய கதைகளுக்கும் இந்தத் தடைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது உறுதியாகிறது.

அதைவிட, வடக்கில் தொடங்கப்பட்ட புலி வேட்டையானது இந்தத் தடையை விதிப்பதற்கான ஒரு கருவியாக உருவாக்கப்பட்டிருக்கலாம்.

அதேவேளை இந்தத் தடையின் மூலம் புலம் பெயர் தமிழர்களின் அரசியல் பலத்தைச் சிதைக்கவும் அவர்களுக்கும் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கும் இடையில் இருக்கின்ற சுமுகமான உறவுகளைக் குலைக்கவும் அரசாங்கம் முயற்சிப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள 16 அமைப்புகளில் பல மேற்கு நாடுகளின் அரசாங்கங்கள் அரசியல் தலைவர்களுடன் சுமுகமான உறவைப் பேணும் நிலையில் இருப்பவை.

உதாரணத்துக்கு உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், கனேடிய தமிழ் காங்கிரஸ் உள்ளிட்ட அமைப்புகள் இவ்வாறானவை. இவை, விடுதலைப் புலிகளின் எந்தவொரு அமைப்பினதும் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை.

ஆனால், இந்த அமைப்புகள் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கும் அதிகாரப் பகிர்வுக்கும் கொடுக்கும் அழுத்தங்களை அரசாங்கத்தினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்தத் தடையின் மூலம் புலம்பெயர் அமைப்புகளை நெருக்கடிக்குள் தள்ளுவது மட்டும் அரசாங்கத்தின் நோக்கமல்ல.

ஜெனிவாவில் தமக்கெதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய மேற்குலக நாடுகளையும் சிக்கலுக்குள் மாட்டி விடுவதுதான் அரசாங்கத்தின் இலக்காக உள்ளது. ஏனென்றால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ள 1373 ஆவது இலக்க ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்துக்கு உலக நாடுகள் அனைத்தும் கட்டுப்படுபவை.

பயங்கரவாதத்தை ஒழித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இது. அமெரிக்கா மீது அல்கொய்தா நடத்திய தாக்குதலையடுத்து, 2001 செப்ரெம்பர் 28 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படை நோக்கம் பின்லேடனையும் அல்கொய்தாவையும் நசுக்குவதற்கு உலகளாவிய ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்வதுதான்.

அமெரிக்கா அந்த நோக்கத்தை பெரும்பாலும் அடைந்துவிட்டது என்றே கூறலாம். இப்போது இலங்கையும் அது வழியில் நடக்கப் பார்க்கிறது.

விடுதலைப் புலிகளுடன் போர் நடத்திய போதுகூட விடுதலைப்புலிகளுக்கு எதிராக இத்தகைய தடையை விதிக்க முனையாத இலங்கை அரசாங்கம் போருக்குப் பின்னர் 5 ஆண்டுகள் கழித்து இந்தத் தடையை விதித்திருக்கிறது.

இது புலம்பெயர் தமிழர்களின் அரசியல் போராட்டங்களை நசுக்குவதற்கான முயற்சி என்பதைவிட வேறெதுவாகவும் இருக்க முடியாது.

இந்தத் தடைக்குப் பின்னரும் குறிப்பிட்ட புலம்பெயர் அமைப்புகளுடன் மேற்கு நாடுகள் உறவுகளை வைத்துக் கொண்டு இருந்தாலோ, அவற்றைச் செயற்பட அனுமதித்தாலோ பயங்கரவாதத்துக்குத் துணை போவதாக மேற்கு நாடுகளை நோக்கி இலங்கை சுட்டு விரலை நீட்டப் போகிறது.

அத்துடன் புலம்பெயர் தமிழ் பிரதிநிதிகள் சர்வதேசக் கூட்டங்களில் பங்கேற்பதற்கும் இலங்கை சட்டரீதியாக எதிர்ப்பைத் தெரிவிக்கும்.

அவர்கள் எதைச்சொன்னாலும் அது பயங்கரவாதிகளின் கருத்தாக தட்டிக்கழிக்கும்படி எடுத்துக்கூறும்.

இதுதான் இனி நடக்கப்போகிறது. இதன்மூலம் புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச அளவில் கொடுத்துவரும் தலைவலியைக் குறைக்கலாம் என்று இலங்கை அரசாங்கம் கருதுகிறது.

இந்த அமைப்புகளில் இயங்குவோருக்கும் இலங்கையில் வசிக்கும் அவர்களின் உறவுகளுக்கும் இடையிலான உறவில்கூட இந்தத் தடை விரிசலை ஏற்படுத்தும்.

அவ்வாறான உறவு நீடித்தால் தடை செய்யப்பட்ட அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டி இங்குள்ள உறவினர்கள் தண்டிக்கப்படக் கூடும்.

எனவே, புலம்பெயர் தமிழர்கள் தமது இங்குள்ள உறவுகளுடன் உறவைத் துண்டிக்க வேண்டும்; அல்லது இலங்கை அரசுக்கு எதிரான செயற்பாடுகளில் இருந்து ஒதுங்க வேண்டும்.

புலம் பெயர் தமிழர்கள் தமது உறவுகளின் தொடர்புகளைத் துண்டிப்பதால் ஏற்படும் விரிசல் புலம்பெயர் தமிழர்களின் இலங்கை அரச எதிர்ப்பு போராட்டங்களை உளவியல் ரீதியாக வலுவிழக்கச் செய்யும்.

இது இனிவரும் காலத்தில் இலங்கைக்கான சர்வதேச அழுத்தங்களைக் குறைப்பதற்கு உதவியாக அமையும்.

இவ்வாறு அடுக்கடுக்கான பல இலக்குகளை அடையும் நோக்கில்தான் அரசாங்கம் இந்தத் தடையை விதித்துள்ளது.

அதேவேளை, இந்தத் தடையின் மூலம் அரசாங்கத்தின் தோல்வி ஒன்றும் வெளிப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கோபியை வைத்தும் அவர் சார்ந்த புலம் பெயர் செயற்பாட்டாளர்களை வைத்தும் புலம் பெயர் தமிழ் அமைப்புகளை முடக்க முயற்சித்தது அரசாங்கம்.

புலம் பெயர் தமிழர்கள் தம்மைத் தேடி வருவதாகவும் அவர்களுடன் அரசாங்கம் நல்லுறவை ஏற்படுத்த முனைவதாகவும் முன்னர் காட்டிக் கொண்ட அரசாங்கம் இப்போது புலம்பெயர் தமிழ் அமைப்புகளை பயங்கரவாத அமைப்புகளாகப் பட்டியல் இட்டுள்ளது.

இது புலம்பெயர் தமிழ் அமைப்புகளை வசப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் அடைந்துள்ள தோல்வியை எடுத்துக்காட்டியுள்ளது. இந்தத் தடைகளின் மூலம் வெளிப்படையான போர் ஒன்றை புலம்பெயர் அமைப்புகளுக்கு எதிராக அரசாங்கம் தொடுத்துள்ளது.

இது இரு தரப்புக்கும் சுமுகமான இணக்கத்தை ஏற்படுத்தும் கதவுகளை மட்டும் அடைக்கப் போவதில்லை. இலங்கை அரசுக்கு எதிரான புலம் பெயர் தமிழ் அமைப்புகளின் நிலைப்பாட்டை இன்னும் கடுமையாக்கவும் காரணமாகலாம்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விவகாரத்தில் சர்வதேசம் தலையிடுகிறது

## கொதிக்கிறார் அமைச்சர் நிமால்

ஐக்கிய நாடுகளின் மனித வுரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் உள்ளக செயற்பாடுகளில் தலையீடு செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அது மாத்திரமின்றி அவரால் நியமிக்கப்டும் விசாரணைக்குழுவை மட்டுமல்ல அவரது நாயைக்கூட எமது நாட்டில் விசாரணை மேற்கொள்ள அனுமதிக்கப்போவதில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அங்கு தொடர்ந்தும் கூறுகையில்,

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடு களின் மனிதவுரிமை பேரவையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட குறித்த பிரேரணையை நாம் ஏற்கனவே நிராகரித்து விட்டோம். இந்த சந்தர்ப்பத்திலும் கூட நாம் எதிர்க்கின்றோம். ஏனெனில் எமது உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய சக்திகள் தலையீடு செய்வதை நாம் விரும்பவில்லை.

இலங்கை என்பது இறைமையுள்ள நாடாகும். ஜனநாயக ரீதியில் தெரிந்தெடுக்கப்பட்ட அரசாங்க மொன்றும் உள்ளது. எனவே எமது விவகாரங்களில் தலையிட முடியாது.

எமது வீட்டில் பிரச்சினை இருந்தால் நாமே அதற்கு தீர்வு காண வேண்டும். அதேபோன்று எமது நாட்டில் பிரச்சினை காணப்பட்டால் அதற்கும் நாமே தீர்வினை காண வேண்டும். இதன் காரணமாகவே எமது அரசாங்கம் சர்வதேச சதிகளுக்கு எதிராகவும் அமெரிக்கப் பிரேரணைக்கு எதிராகவும் ஜெனீவாவில் போராடியது.

ஏனெனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் சுயாதீனத் தன்மை , இறைமை மற்றும் மகத்துவத்தை பாதுகாப்பதற்கும் நாட்டின் அபிமானத்தை பாதுகாப்பதற்கும் நியமிக்கப்பட்ட ஒருவராவார்.

ஆகவே இலங்கை தொடர்பில் விசாரணையை மேற்கொள்வதற்கு நவநீதம்பிள்ளையினால் குழுவிற்கோ அல்லது அவரது வீட்டின் நாய் கூடவோ இலங்கைக்கு வந்து விசாரணை நடத்துவதற்கு இடமளிக்க மாட்டோம். இதில் நாம் மிகத் தெளிவாக இருக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (2)

# இந்தியாவின் நிலைப்பாட்டில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மான வாக்கெடுப்பு குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டில் சந்தேகம் உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீது ஏன் இந்தியா வாக்களிக்கவில்லை என உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்தது. ஆனால் இந்த ஆண்டு இந்தியா வாக்களிக்கவில்லை என அவர் கூறினார்.

இந்தியா, 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தும் என தாம் நினைப்பதாக அவர் தெரிவித்தார்.

ஜெனீவா வாக்கெடுப்பில் இந்தியா விலகியிருந்த நிலையில், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டமையையும் மொஹமட் முஸம்மில் சுட்டிக் காட்டினார். (2)

# முச்சக்கரவண்டி திருட்டு

(கரணவாய்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்ட முச்சக்கர வண்டியொன்று திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த மாதம் அங்கு இடம்பெற்ற ஆசீர்வாதப்பெருவிழாவின் போது இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாகத் தெரிய வருவதாவது,

வாடகைக்கு அமர்த்தப்பட்ட முச்சக்கர வண்டியொன்று நெல்லியடியிலிருந்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு பயணித்தது.

குறித்த துவிச்சக்கரவண்டி யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டு அதன் உரிமையாளர் அருகில் நின்றவருடன் சம்பாசித்துக் கொண்டிருந்துள்ளார்.

திடீரென உரிமையாளர் முச்சக்கரவண்டி நிறுத்தி வைக்கப்பட்ட இடத்தை நோக்கிய போது அவ்விடத்தில் நின்ற முச்சக்கரவண்டி மாயமானது. பதற்றமடைந்த முச்சக்கரவண்டி சாரதி அவ்விடத்தில் தேடுதல் மேற்கொண்டார்.

முச்சக்கரவண்டி கிடைக்காத நிலையில் பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன் அம் முச்சக்கர வண்டிக்குள் கடை வியாபாரத்திற்கென வாங்கி வைக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் பறி போயின. (2-60)



பொலிகண்டி பத்திரகாளி அம்பாள் ஆலய தாகசாந்தி நிலைய அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது...

(படம்: கரணவாய் செய்தியாளர்)

# இன்று ஒரு தகவல்

## அனைவரும் சமம்

ஒரு சிகை அலங்காரக் கூடம். மிகவும் சுறுசுறுப்பாக எல்லோரும் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

முடிவெட்ட அதிகமானவர்கள் வந்திருந்தார்கள். எல்லோரும் வரிசையாக அமர்ந்திருந்தார்கள்.

அந்த நேரத்தில் திடீரென்று கதவைத் திறந்து கொண்டு ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் ஒரு பெரிய மனிதர். அவரும் முடிவெட்டுவதற்காகத் தான் அங்கு வந்திருந்தார்.

அவரைப் பார்த்தவுடனேயே அங்கே வரிசையில் அமர்ந்திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து அவரின் அருகே வந்து அவரைச் சுற்றி நின்றார்கள்.

எப்படி இருக்கிறீர்கள் , நலமாக இருக்கின்றீர்களா என்று விசாரித்தனர்.

எல்லாம் முடிந்ததும் வந்தவர் வரிசையிலே கடைசியாக இருக்கின்றவர் யார்? என்று கேட்டார். ஏன்? என்று கேட்டார்கள்.

நான் அதற்கு அடுத்த படியாக அமர வேண்டும், அதற்காகத் தான் கேட்டேன் என்றார்.

உடனே அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள், நீங்கள் வரிசையிலே காத்திருக்கக் கூடாது. நீங்கள் அரசாங்கத்தின் தலைவர், எங்களுக்கு நேரம் முக்கியம். அதனாலே நீங்கள் முதலாவதாக அமருங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் அவர் அதைக் கேட்கவில்லை. தோழர்களே உங்கள் கருத்துக்கு நன்றி. எல்லோரும் வரிசையின்படி தான் வரவேண்டும். அது தான் முறை. வரிசையிலே வரவேண்டும் என்ற நடைமுறையை நானும் பின்பற்ற விரும்புகிறேன். நாம் எல்லோரும் சமமானவர்கள் என்றார்.

இப்படிச் சொல்லி விட்டு வரிசையிலே கடைசியாக இருந்த ஒருநாற்காலியில் அவர் அமர்ந்து கொண்டார்.

தன் சட்டைப் பையிலிருந்த ஒரு செய்தித் தாளை எடுத்தார். படிக்க ஆரம்பித்தார்.

ஆனால் அங்கே இருந்தவர்களால் இதைப் பார்த்துக் கொண்டு பேசாதிருக்க முடியவில்லை ஒருவர் எழுந்து வந்தார்.

ஐயா இப்போது என்னுடைய முறை. நீங்கள் இங்கே காத்துக்கொண்டிருப்பதை விட, ஐந்து ஆண்டுகளுக்கு கூட முடி வெட்டிக் கொள்ளாமல் என்னால் இருக்க முடியும் என்றார். அவர் நிமிர்ந்து பார்த்தார். இவர் மறுபடியும் சொன் னார்.

ஐயா, நீங்கள் வரிசை முறையைத் தாண்டிப் போக விரும்பவில்லை. சரி ஆனால் என்னுடைய முறையை மாற்றிக் கொடுக்க எனக்கு முழு உரிமையும் இருக்கிறது. இதற்குப் பதிலாக உங்களுடைய கடைசி இடத்தை நான் எடுத்துக் கொள்கிறேன். இதை நீங்கள் மறுக்க முடியாது என்றார்.

அங்கே இருந்த மற்றவர்களும் இதை ஒரு மனதாக வற்புறுத்த ஆரம்பித்தார்கள்.

அந்தப் பெரிய மனிதர் ஒருவாறு ஒப்புக்கொண்டார்.

அவர் யார் தெரியுமா?., அவர் தான் மாவீரர் லெனின்.

ரஷ்யாவிலே கிரெம்ளின் சிகை அலங்காரக் கூடத்திலே தான் இச்சம்பவம் நடந்தது. எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று வாயளவில் பேசுவதில் என்ன பயன்?.

நாம் எல்லோரும் சமம் என்பதை நடைமுறையில் காட்டியவர்கள் மிகச் சிலர் தான் உள்ளார்கள்.

அவர்களில் ஒருவர் தான் தோழர் லெனின்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கிற்கு ஊதுவோமா சங்கு?



இன்று சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் உச்சரிக்கப்படும் சொல்லாக டெங்கு மாறிவிட்டது. வருடத்தில் 4 முறைக்கு குறையாமல் டெங்கு தடுப்பு தேசிய வாரமாக கொண்டாடுமளவிற்கு அது தன் நிலையை உயர்த்திக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் தனியே மருத்துவப் பிரச்சினையாக நோக்கப்பட்ட டெங்கு இன்று மருத்துவ சுகாதார துறையினரின் கைகளிலிருந்து விடுபட்டு, சமுதாயப் பிரச்சினையாக தத்தெடுக்கப்பட்டுள்ளது. சிறுவர் முதல் பெரியவர் வரை இறப்பு வீதத்தை ஏற்றிச் செல்லும் உயிர் கொல்லி நோயாக இனம் காணப்பட்ட டெங்கு பெருமளவு சமுதாயத்துக்கு தீங்கைச் செய்தாலும் தமிழ் மக்களுக்கு இரு நன்மைகளையும் செய்திருக்கின்றது. தனித்தனியே தாமுண்டு தம் பாடுண்டு என்று இயங்கி வருகின்ற அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை டெங்கு கட்டுப்பாட்டுச் செயன்முறை மூலம் ஒன்றிணைத்து ஒத்து இயங்க வைத்திருக்கின்றது.

மற்றைய நன்மை யாதெனில் இன்று எம்மினம் சமுதாய நாகரீகம் என்னும் மாயையில் உடலில் ஆடைகள் நாளும் குறைந்து செல்லும் போது அது நம் பாரம்பரியத்தை நினைவுபடுத்தி உடலை மூடும் ஆடைகள் அணிய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது.

**டெங்கு என்றால் என்ன?**

உண்மையில் டெங்கு என்பது ஒருவித வைரஸ்சினால் ஏற்படுகின்றது. இது உயிருள்ள அங்கிகளினாலேயே பெருகக்கூடியது. மனிதனில் நோயை ஏற்படுத்தும் டெங்கு வைரஸ் ஒருவர் உடலிலிருந்து மற்றவருக்கு Adis agipti எனும் நுளம்பு மூலமே கடத்தப்படுகிறது. எனவே டெங்கை கட்டுப்படுத்த வேண்டுமெனில் அதனை காவிச் செல்லும் நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தினால் மட்டுமே அது சாத்தியம் ஆகும். வெற்றிகரமாக டெங்கு பரப்பும் நுளம்பை கட்டுப்படுத்த வேண்டுமெனில் அதன் வாழ்க்கை முறை, முட்டை இடும் இடங்கள், கடிக்கும் நேரம் என்பவை பற்றி பூரணமாக அறிந்திருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

**டெங்கு காவி நுளம்பின் இயல்புகள் யாவை?**

மிகவும் சிறிய நுளம்பு. ஆனால் மிகவும் சுறுசுறுப்பான நுளம்பு.

அது எவ்வளவு சுறுசுறுப்பானதாக இருந்திருந்தால் பல அரச திணைக்கள உத்தியோகத்தர்களை மணிக்கணக்கில் கூட்டம் போட வைத்து செயலாற்றத்தூண்டி இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்களேன்.




உடலில் வெண்ணிற அடையாளங்களையும் கால்களில் வெண்ணிற, கருநிற வளையங்களை கொண்டது. அதனால் Tighes mosquito என்ற செல்லப் பெயரைக் கொண்டது.

அதன் வாழ்க்கைக்காலங்கள் வெறும் 03 - 04 வாரங்களே.

அதன் வாழ்க்கைக் காலங்களில் 03 -04 தடவைகள் முட்டை இடும.

ஒவ்வொரு தடவையும் 100-300 வரையான முட்டைகள் இடுகின்றன.

தெளிந்த நீர் நிலைகளில், மழைநீர் , சாக்கடை நீர் தேங்கும் இடங்களிலேயே இது முட்டை இடுகிறது.

இதன்முட்டைகள்ஒட்டும்தன்மை கொண்டதுடன் 06-12 மாதங்கள் கடும் வரட்சியையும் தாங்கும் தன்மை கொண்டவை. தமக்கு ஏற்ற சூழல் ஏற்படும் போது அவை பொரித்து குடம்பிகளை ஆக்குகின்றன.

இந்த நுளம்புகள் அதிகாலை வேளைகளிலும் (முற்பகல் 5.00– 7.30) மாலை வேளைகளில் (பிற்பகல் 5.00 – 7.30) மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். இவ்வேளைகளே இவற்றின் கடிகாலமாகவும் இரு க்கிறது.

**எங்கள் சூழலை டெங்கு அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள் எவை?**

எமது சூழலை டெங்கு அபாயமற்ற சூழலாக மாற்ற வேண்டுமெனில் டெங்கு பரப்பும் நுளம்புகள் அதிகமாக பெரும் இடங்கள் எவை என்பது பற்றிய அறிவு எமக்கு அவசியமாகும்.

அவ்வாறான இடங்களை அழித்தல், அகற்றுதல், எரித்தல் மூலமே எமது சூழலை டெங்கற்ற சூழலாக மாற்ற முடியும். மேலும் கழிவு நீர் ஓரிடத்தில் தேங்கி நிற்காது பரவி ஓடக்கூடியதாக இருந்தாலும் வாய்க்கால்கள் துப்புரவாக இருந்தாலும் அபாயம் வெகுவாகக் குறையும்.

வாரத்தில்ஒருதடவையாவது உங்கள்வீட்டுச்சூழலைத்துப்புரவுசெய்து அபாய இடங்களை அழித்தல் வேண்டும்.

வீட்டுத்தோட்டத்தில் உள்ள தாவரங்களிலுள்ள பிளவுகள், துவாரங்களில் அல்லது வெட்டப்பட்ட வாழை அடிகளில் நீர் தேங்காது இருப்பதை உறுதி செய்தல்.

பழைய வாகன டயர்களின் உட்புறம் மழை நீர் தேங்காது களஞ்சியப்படுத்தல் வேண்டும். கிராம மட்ட டெங்கு கட்டுப் பாட்டுக் குழுக்களும் அலுவலக மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக்குழுக்களும் பெயரளவில் மட்டும் இயங்காது உயிர்ப்புடனும் விளிப்புடனும் இயங்கி கிராம, அலுவலகங்களில் அபாயமற்ற சுற்றுச் சூழலை உறுதிப்படுத்துதல்.

பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளை மற்றைய உக்கக்கூடிய கழிவுகளிலிருந்து தரம் பிரித்து வேறாக்கி அகற்றுதல், அழித்தல், கழிவகற்றும் வண்டிகளில் சேர்ப் பித்தல்.

உக்கக்கூடிய கழிவுகளை சேதனப்பசளையாக்கி மீளப்பயன் படுத்துதல் (வீட்டுத்தோட்டத்தில், அழகுத் தோட்டத்தில்)

இவ்வாறான செயற்பாடுகளில் நீங்கள் பரீச்சயமானால் உங்களையும்நீங்கள்உங்களையும்உங்கள்குடும்பத்தவரையும் அயலவரை யும் ஏன் கிராமத்தவரையும் டெங்கு நோயிலி ருந்து காப்பாற்றி விடலாம்.

(தொடரும்)

Dr.P.ஜெசிதரன்
சுகாதார வைத்திய அதிகாரி,
யாழ்.மாநகரசபை

# ஆளும் கட்சிக்குள் ஒற்றுமை அவசியம்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஜெனீவா விவகாரம் தொடர்பில் ஆளும் கட்சிக்குள் ஒரே நிலைப்பாடு காணப்பட வேண்டு மென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து ள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டு மென அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் எழுப்பப்படும் கேள்விகளுக்கு ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒருமித்த குரலில் பதிலளிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# தங்க நகைகளுடன் மூன்று பெண்கள் கைது

அரைவாசி செய்து முடிக்கப்பட்ட நலையில், 3 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை எடுத்துச் சென்ற மூன்று பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர.

44, 46 மற்றும் 58 வயதுடைய குறித்த பெண்களே நேற்று முன்தினம் சென்னைக்குச் செல்லத் தயாரான போது கைது செய்யப்பட்டுள்ளனர். அரைவாசி செய்து முடிக்கப்பட்ட நிலையில், 21 நகைகள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன் மூவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2)

# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும்

## அமெரிக்க தூதுவர் மிச்சேல் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த இன நல்லிணக்கம் முக்கியமானது என அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே. சிசன் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கிரிக்கெட போட்டித் தொடர் ஒன்றில் பங்கேற்ற போது அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கையில் இன நல்லி ணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா முழு அளவில் ஆதரவளிக்கும.

கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய சமூக நலத் திட்டங்களின் மூலம் நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கி வருகிறது என்றார். (2)

# ஆயுத போராட்டம் ஏற்படுவதை அரசாங்கம் விரும்புகின்றதா?

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்கள் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்துக்கு தயாராக வேண்டுமென்ற எண்ணத்திலா இலங்கை அரசாங்கம் புலம் பெயர் தமிழர்களுக்கு தடையை விதித்துள்ளது. இந்நாட்டில் அரசியல தீர்வொன்றை நோக்கியே நாம் எல்லோரும் ஜனநாயக வழியில் போராடி வருகிறோம்.

இதை இலங்கை அரசாங்கம் உணர வேண்டும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பா.அரியநேத்திரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் தெரிவித்தனர்.

புலிகள் உட்பட 16 அமைப்புகளுக்கு தடை மேற்படி அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் என பட்டியல்படுத்தி 424 புலம் பெயர் தமிழர்களுக்கு தடை விதிக்கப்பட்டது தொடர்பில் தமது கருத்தைத் தெரிவித்த போதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் ஆகியோர் மேற்படி கருத்துகளை தெரிவித்தார்கள். (2)

# ஜனாதிபதி மஹிந்த பஹ்ரெய்னுக்கு விஜயம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பஹ்ரெய்னுக்கு விஜயம் செய்யவு ள்ளார்.

ஜனாதிபதி எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 30 ஆம் திகதி வரை தனது பயண காலத்தை வரையறுத்துள்ளார்.

இதன்போது பஹ்ரெய்னுடன் உறவை பலப்படுத்தும் பேச்சுக்களை ஜனாதிபதி முன்னெடுக்கவுள்ளதாக பஹ்ரெய்ன் நியூஸ் ஏஜென்சி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பஹ்ரெய்ன் பிரதமர் 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது பொருளாதாரம் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# இலங்கையில் கிளர்ச்சிகள் வெடிக்க வாய்ப்புள்ளது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் ஜனநாயக ரீதியில் அரசாங்கத்தை கவிழ்க்காவிட்டால், மக்கள் கிளர்ச்சி நடத்தி அரசாங்கத்த்த வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்படும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

உடவலவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சில நாடுகளில் இடம்பெற்ற கிளர்ச்சிகளைப் போன்று இலங்கையிலும் கிளர்ச்சிகள் வெடிக்க வாய்ப்பு உண்டு என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்தகால அரசியல் தலைவர்களின் சேவைகளை தற்காலத் தலைவர்கள் மறந்து விட்டதாகத் தெரிவித்துள்ளார். பெருமளவிலான அரசியல வாதிகள் பொருளாதார நன்மைகளை அடிப்படையாகக் கொண்டே தேர்தலில் போட்டியிடுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது ஆட்சிக் காலத்தில் இலஞ்ச ஊழல் மோசடிகளை தடுக்க பல் வேறு வழிகளில் முயற்சிகளை செய்து வந்ததாகவும், தற்போ்து அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவின் அனுசரணையை பெறுவதில் எவ்வித தவறும் இல்லை

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

இலங்கைப் பிரச்சினை தொடர்பில் தென்னாபிரிக்காவின் அனுசரணையை பெறுவதில் எவ்விதமான தவறும்இல்லை. அது வரவேற்புக்குரியதாகும். எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தென்னாபிரிக்க விஜயம் பிரச்சினை அல்ல என்று அரசாங்கத்தின் பங்காளி கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேற்குலகம் எமக்கு அதை செய் இதை செய் என்று கட்டளையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது அதனை எதிர்க்கின்றோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தென்னாபிரிக்கா செல்வது நல்ல விடயமாகும். ஏனென்றால் தென்னாபிரிக்காவில் யுத்தத்தின் பின்னர அவர்கள் எப்படி இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்றும், மீள்கட்டமைப்பினை உருவாக்கும் நடவடிக்கை தொடர்பாக கூட்டமைப்பினர் தெரிந்து கொள்ள முடியும். (2)

# ஜனாதிபதி தேர்தலை நடத்தும் எண்ணத்தை கைவிட்டது அரசு

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டிருந்த நிலையில் நடந்து முடிந்த மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல் முடிவு கிடைத்த பிற்பாடு அரசும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவும் அத்திட்டத்தை கைவிட்டுள்ளனர் என ஐ.தே.க. தேசிய தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மேல், தென் மாகாண சபைகளுக்கு ஐ.தே.கவினால் தெரிவானோர்களுக்கு நேற்று முன்தினம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் நியமன கடிதம் வழங்கி வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதேவேளை, இத்தேர்தல் முடிவினூடாக மக்கள் சர்வாதிகார ராஜபக்ஷ ரெஜிமண்ட் என்ற மரத்தினை பிடுங்கியெறிய அம்மரத்தின் ஆணிவேரினை இலகுபடுத்தியுள்ளனர்.

இனிமேல் அம்மரத்தை பிடுங்கி எறிய வேண்டியது ஐ.தே. கட்சியினுடைய பொறுப்பாகும். அதிலிருந்து எம்மால் விடுபட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (2)

# வர்ணங்களை இனம் காண முடியாத நிலையில் இரு அமைச்சர்கள்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கவுக்கும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு வர்ணங்களை அறிய முடியாத கண கோளாறு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் அரசாங்கத்தின்சிகப்பு ஒளியை கட்டியுள்ளதாக இவர்கள் கூறியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேர்தல் முடிவுகள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கும் "சிகப்பு எச்சரிக்கை ஒளி" என திஸ்ஸ அத்த நாயக்க கூறுகிறார்.

இதேவேளை,சிகப்பு எச்சரிக்கை இருப்பதாக எமது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் கூறியுள்ளார்.

தேர்தல் முடிபுகளை பார்க்கும் போது அப்படியான எந்த சிகப்பு எச்சரிக்கை ஒளியையும் காண முடியவில்லை. உலகில் ஏனைய நாடுகளில் தேர்தல் நடத்துவது போல் நாமும் தேர்தலை நடத்தி அதில் வெற்றியீட்டினோம்.

வெற்றிபெற்றால் அது எப்படி சிகப்பு எச்சரிக்கை ஒளியாக இருக்கும்? இவர்களுக்கு வர்ணங்களை கண்டறிய முடியாத கண் கோளாறு ஏற்பட்டுள்ளது.

அதிகாரத்தை மாற்றும் புரட்சிக்கு பச்சை ஒளி காட்டப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. ஆனால் மங்கள சமரவீரவினால் மாத்தறையில் வாக்குகளைக்கூட அதிகரித்து கொள்ள முடியவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தானே பொருத்தமானவர் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கின்றார். அப்படியானால் அதிகார மாற்றத்திற்கான பச்சை ஒளி ஐக்கிய தேசியக் கட்சிக்கு புலப்பட்டுள்ளது.

இதனை தவிர அரசாங்கத்தில் இருக்கும் எவருக்காவது சிகப்பு எச்சரிக்கை ஒளி புலப்படுகிறது என்றால் அவர்களை எனது நண்பரான கண் மருத்துவர் வாரிபொல விடம்காட்டி பரிசோதனை செய்ய நான தயாராக இருக்கின்றேன் என்றார். (2)

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

க.பொ.த (சா/த) பரீட்சை -2013 பெறு பேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சையில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

அதன் விபரம் வரு மாறு,

**யாழ் இந்து மகளிர் கல்லூரி**

ஆங்கில மொழி மூலம்

கே. சண்முகாயினி-9ஏ, எஸ். பிரவீனா -7ஏபிசி, ஆர்.வித்யா- 7ஏபிசி,

தமிழ்மொழி மூலம்

எஸ்.அபித்ரா-8ஏபி, எஸ்.துவாரகா- 8ஏபி, எம்.மகிழினி-8ஏசி, எஸ்.சியாமினி-8ஏசி, ஜி.கோபிகா-8ஏசி, ஜேநித்தியா-8ஏசி, ஆர்.சாரங்கா- 8ஏசி, எஸ். ஷியானா-8ஏசி, எஸ்.தனுஷ்யா- 8ஏசி, கே.தர்ஷனா-8ஏசி, என்.றூத் நியோமி-8ஏசி, ரி.கோபி ஷ்கா- 8ஏசி, ஜி.கஸ்தூரி-8ஏஎஸ், யு.கபீஷா- 8ஏஎஸ், கே.சுபாஹரி-7ஏ2பி, என்.பிரஷாந்தி-7ஏ2பி, எஸ்.கிருஷிகா-7ஏபிசி, ஏ.நளாயினி -7ஏபிசி, ஜே.மதுஷா-7ஏபிசி, ஏ.தர் ஷிகா-7ஏபிசி, எஸ்.அபினுகா-6ஏ 2பிசி, எஸ்.மதுஷா-6ஏ2பிஎஸ், ஜே.ஷானுஜா- 6ஏ2பிஎஸ், வி.ஜிந் துஜா-6ஏ2பிஎஸ், லோகிதா-6ஏபி2சி, பி.சிலுக்ஷா-6ஏபி2சி, எஸ்.நிரோசிஜா- 6ஏபிசிஎஸ், என்.கேஷிகா-6ஏ3சி

# பிரிவுத்துயர் பகிர்வு



## கந்தையா முருகேசு

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் குளம் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முருகேசு நேற்றுமுன்தினம்ஞாயிற்றுக்கிழமைஅன்றுகாலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்ரான்சல்லி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## திருமதி பரமசிவம் தங்கலட்சுமி

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கு கலட்டி மூலையை வசிப்பிடமாக்வும் கொண்ட பரமசிவம் தங்கலட்சுமி கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி தெற்குபூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## செபமாலை அருளானந்தம்

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Ajax ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை அருளானந்தம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Church Prince Of Peace 265 Alton Tower, Toronto, On, Canada என்னும் முகவரியில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



## நாகலிங்கம் அருளம்பலம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அருளம்பலம் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## நடராஜா குகபாலன்

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா குகபாலன் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு ChapelRidge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி சுந்தரலிங்கம் ஞானாம்பிகை

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் ஞானாம்பிகை கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## திருமதி சுப்பிரமணியம் பூரணம்

அராலி வடக்கு செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பூரணம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

# தென்னாபிரிக்க மத்தியஸ்தம் தனித்தமிழீழத்தை உருவாக்கும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கர்ஜிப்பு

(கொழும்பு)

**தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் இங்கு தனித் தமிழீழம் உருவாகும். எனவே, அரசாங்கம் இதனை நிராகரிக்க வேண்டுமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.**

துப்பாக்கியில் ரவைகளைப் போட்டு சுடுவதற்கு தயார்படுத்தி அமெரிக்காவின் கையில் கொடுத்துவிட்டு ஜெனீவாவில் இந்தியா கைகளைக் கழுவிக்கொண்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகள் எமது நாட்டு நிலைமைகளை கண்காணிப்பதற்காக இணைத்தலைமை நாடுகள் என்ற பெயரில் நியமிக்கப்பட்டன.

இதேபோன்று இன்று இந்தியா கபடத்தனமான நாடகத்தை அரங்கேற்றி வருகிறது.

அதன் வெளிப்பாடே தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தமாகும். இந்தியா, ஜப்பான், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் இலங்கை தொடர்பாக உதவவும் எதிர்கால நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் தீர்மானித்துள்ளன.

நமது நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடை வருமானால் அதிலிருந்து எம்மை பாதுகாக்கவும், உதவிகளை வழங்கவும் ஜப்பான் முன்வரும்.

இந்தியாவும், தென்னாபிரிக்காவும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்ற அழுத்தத்தைக் கொடுக்கும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் நிலைமைக்கு தள்ளப்படும்.

இறுதியில் இது இலங்கையில் பிரிவினையை நோக்கிச் செல்லும். தென்னாபிரிக்க பிரிவினைக்கு துணை போகும்.

இறுதியில் தனித் தமிழீழம் உருவாகும். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திட்டமாகும் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெ.பாதுகாப்பு அமைச்சர் சீனா சென்றுள்ளார்



(டோக்கியோ)

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் சக்ஹெகல் மூன்று நாட்கள் பயணமாக நேற்று சீனா சென்றுள்ளார்.

அங்கு அவர் சீன இராணுவத்தின் வலிமையின் அடையாளமாக இருக்கும் விமானம் தாங்கி கப்பலை பீஜிங்கில் பார்வையிடுகிறார்.

வோஷிங்டனின் வேண்டுகோளை ஏற்று அவர் வருகை குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# காங்கிரஸ் அரசின் தவறான ஆட்சி நாட்டை பின்னோக்கி நகர்த்துகிறது

## பிரசார கூட்டத்தில் நரேந்திர மோடி

(பிஜினோர்)

**காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசின் தவறான ஆட்சி, நாட்டை பின்னோக்கி கொண்டு செல்கிறது. அவர்கள் நாட்டை நேசிப்பதில்லை; பிரதமர் மன்மோகன் சிங்கை கூட ஒரு காங்கிரஸ் தலைவராக அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என பா.ஜ.கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

உத்தர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின்போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்.

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசின் தவறான ஆட்சி, நாட்டை பின்னோக்கி கொண்டு செல்கிறது. ஒரு தனிப்பட்ட குடும்பத்தையே காங்கிரசார் நேசிக்கிறார்களே தவிர, நாட்டை அவர்கள் நேசிப்பதில்லை. பிரதமர் மன்மோகன் சிங்கை கூட ஒரு காங்கிரஸ் தலைவராக அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

வருகிற தேர்தலில் காங்கிரசுக்கு மக்கள் எந்தவித இரக்கமும் காட்டமாட்டார்கள். சி.பி.ஐ. கூட இந்த தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை காப்பாற்ற முடியாது.

காங்கிரஸ் கட்சியால் நீங்கள் ஏற்கனவே பல துன்பங்களை அனுபவித்துள்ளீர்கள். ஆனால் உங்கள் குழந்தைகளும் துன்பப்படவிடாதீர்கள்.

இதுவே மாற்றத்துக்கான சரியான நேரமாகும். அதன்படி, கடந்த 60 ஆண்டுகளாக நீங்கள் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுத்தீர்கள். ஆனால் வருகிற 60 மாதங்களுக்கு ஒரு வேலைக்காரனை நீங்கள் இப்போது தேர்ந்தெடுங்கள்.

அப்படி நீங்கள் தேர்ந்தெடுத்தால், அவர்கள் (காங்கிரசார்) கடந்த 60 ஆண்டுகளில் செய்யாததை நாங்கள் செய்வோம் என நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன்.



பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பலவீனமாக இருந்தால், குழந்தைகள் கூட பள்ளிக்கு செல்ல விரும்பமாட்டார்கள். எனவே வருகிற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 300 இற்கும் மேற்பட்ட இடங்களை தாருங்கள். இந்தியாவை வலிமையான நாடாக ஆக்குகிறேன் என்றார். (2)



சிலி நாட்டின் தென் பகுதியான பைல்லாகோவில் உள்ள மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் பலியாகினார்கள்.

# போர்க்கப்பல்களை ஜப்பானுக்கு அமெரிக்கா வழங்கும்

அமெ.இராணுவ செயலாளர் தெரிவிப்பு

-அமெரிக்க இராணுவ செயலாளர் சக்ஹெகல் ஆசிய பசுபிக் நாடுகளில் 10 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அந்த வகையில் நேற்றுமுன்தினம் ஜப்பான் தலைநகர் டோக்கியோ சென்றார்.

அங்கு ஜப்பான் இராணுவ அமைச்சர் சுனோரி ஒனோடெராவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல் குறித்து விவாதிக்கப்பட்டது.

அதன்பின்னர் அமெரிக்க இராணுவ செயலாளர் சக் ஹெகல் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

வடகொரியாவின் அணு ஆயுத மிரட்டலை சமாளிக்க ஜப்பானுக்கு ஏவுகணைகளை தாக்கி அளிக்கக்கூடிய 2 போர்க்கப்பல்களை அமெரிக்கா வழங்க இருப்பதாக கூறினார்.

இக்கப்பல்கள் 2017 ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ளன. இக்கப்பல்களில் ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் கருவி உள்ளது. அது நீண்ட தூரம், குறுகிய மற்றும் நடுத்தர தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை வழிமறித்து மோதி அழிக்கும் திறன் கொண்டது.

ஏற்கனவே இதுபோன்ற 5 போர்க்கப்பல்களை ஜப்பானுக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

# ஆப்கானிஸ்தான் தேர்தல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்

ஜனாதிபதி ஒபாமா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

வரலாற்று சிறப்புமிக்க தேர்தலை சந்தித்தமைக்காக ஆப்கானிஸ்தான் மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வாழ்த்துச் செய்தியில் கூறியவை வருமாறு.

வரலாற்று சிறப்புமிக்க தேர்தலில் உற்சாகத்துடன் பங்கேற்ற ஆப்கான் மக்களுக்கு அமெரிக்க மக்களின் சார்பாக, பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆப்கானிஸ்தான் வரலாற்றிலேயே முதல்முறையாக ஜனநாயக ரீதியிலான ஆட்சி மாற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ படை திரும்பப் பெறப்பட்டதற்கு பிறகு ஆப்கான் மக்கள் தங்கள் நாட்டுக்காக முழு பொறுப்பை எடுத்திருப்பது ஆப்கானிஸ்தான் தேர்தல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். ஆப்கான் நாட்டு மக்களுக்கு ஆதரவாக பல்வேறு தியாகங்களை செய்த அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு எனது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆப்கான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் புதிய அரசுடன் பரஸ்பர மதிப்பு மற்றும் பொறுப்



புணர்வு அடிப்படையில் நல்லுறவை தொடர தயாராக இருக்கிறோம். ஜனநாயக ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கா தனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தாய்லாந்து பிரதமருக்கு ஆதரவாக ஆளுங்கட்சியினர் சிவப்பு ஆடை பேரணி

(பாங்கொக்)

தாய்லாந்தில், பெண் பிரதமர் யிங்லக்குக்கு ஆதரவாக, ஆளும் கட்சியினர் சிவப்பு ஆடை பேரணி நடத்தியுள்ளனர்.

யிங்லக் பதவி விலகக் கோரி, தலைநகர் பாங்கொக்கில் பல மாதங்களாக தொடர் போராட்டம் நடந்து வருகிறது.

எதிர்க்கட்சியினரின் தொடர் போராட்டத்தால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பெப்ரவரியில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது.

ஆனால், தேர்தலை எதிர்க்கட்சியினர் புறக்கணித்து தொடர்ந்து போராட்டம் நடத்தினர். இதனால், தேர்தல் செல்லாது என, அந்நாட்டு தலைமை நீதிமன்றம் அறிவித்தது.



இதன் காரணமாக, பிரதமர் யிங்லக் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும் சூழல் உள்ளது.

வருத்தத்தில் உள்ள பிரதமர் யிங்லக்குக்கு, தங்கள் ஆதரவை தெரிவிக்கும் வகையில், ஆளும், பியூ தாய் கட்சி தொண்டர்கள் சிவப்பு ஆடை அணிந்து, தலைநகர் பாங்கொக்கில் கடந்த சனிக்கிழமை பேரணி நடத்தினர்.

பிரதமர் யிங்லக் ஆட்சியை அகற்ற முயன்றால், உள்நாட்டு கலவரம் வெடிக்கும் என, ஆளும் கட்சித் தலைவர்கள் எச்சரித்துள்ளனர். (2)

# நைஜீரியாவில் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு - 79 பேர் பலி

நைஜீரியாவின் ஷம்பாரா மாகாணத்தில் விவசாயிகளுக்கும் கால்நடை வைத்து பிழைப்பு நடத்தும் இருதரப்பினருக்குமான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

இரு தரப்பையும் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

அப்போது அங்கு துப்பாக்கிகளுடன் மர்ம மனிதர்கள் புகுந்தனர். கூட்டத்தில் பங்கேற்றவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர்.

இச்சம்பவத்தில் 79 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர். இத்தாக்குதலில் புலானி என்ற இனத்தை சேர்ந்தவர்கள் ஈடுபட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலுக்கு ஷம்பாரா மாகாண ஆளுநர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். துப்பாக்கி சூட்டில் பலியானவர்களின் இறுதி சடங்கில் அவர் பங்கேற்கவுள்ளார். அதற்காக கலாடிமா கிராமத்துக்கு செல்லவிருக்கிறார்.

# ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் முதல்படி லோக்பால் சட்டம்

## பிரதமர் மன்மோகன்

ஊழலுக்கு எதிராக ஐ.மு.கூட்டணி அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க தவறிவிட்டது என பா.ஜ.க. கூறும் குற்றச்சாட்டை முற்றிலும் தவறானது என மறுத்துள்ளார் பிரதமர் மன்மோகன்சிங். நேற்று முன்தினம் கேரள மாநிலம் தொடுபுழா என்ற இடத்தில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தபோது இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது.

ஊழல் குறித்து மற்றைய அரசுகள் எடுத்த நடவடிக்கைகளை விட நாங்கள் தான் அதிகமான முயற்சி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். இது தான் முற்றிலும் உண்மை.

ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் முதல் படியான லோக்பால் சட்டம். ஊழலை ஒழிக்க மேலும் சில சட்டங்களை கொண்டுவரும் முயற்சி எடுத்துவந்த நிலையில் லோக்பால் சட்டத்தை கொண்டு வருவதற்கும் தயாராக இருந்தோம் என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நம்பிக்கையான கனவுகளில் இருந்து
தான் பொறுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- டயானா ஹைடன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆண் மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்துங்கள்

க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகள் வெளியாகிய நிலையில் பெறுபேற்றின் அடிப்படையில் தேசிய, மாகாண, மாவட்ட நிலைகளிலும் தொடர்ந்து ஒவ்வொரு கல்வி வலயம், ஒவ்வொரு பாடசாலை என்ற வகைப்பாட்டிலும் அவை பெற்றுள்ள தரங்கள், இடங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

பெறுபேற்றின் பகுப்பாய்வுகள் ஆங்கிலப் பாடத்தில் எமது மாணவர்கள் 'ஏ' தரச் சித்தியை பெறமுடியாததன் காரணமாக '9ஏ' என்ற பூரணத்துவமான சித்தியைப் பெறுவதில் பலர் கோட்டை விட்டுள்ளனர்.

ஆங்கிலத்தில் பி தரத்தில் சித்தி அடைவது சாதனை என்பதை நிராகரிக்க முடியாது என்பது உண்மையாயினும், கடந்த வருடங்களில் இவ்விடத்தில் எழுதப்பட்ட 8ஏ + 1பி = 9ஏ என்ற தேற்றத்தை தொடர்ந்தும் கடைப்பிடியுங்கள் என்று சொல்வது அவ்வளவு நல்லது அல்ல.

ஏனெனில் கால அசைவில் முன்னேற்றங்களும் அபிவிருத்திகளும் ஏற்படவேண்டும். அதே நேரம் கடந்த வருடம் பெறப்பட்ட க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடைவு மட்டத்தை விட, இந்த வருட அடைவு மட்டம் உயர்வானதாக இருப்பது அவசியம். அதுவே ஆரோக்கியமான கல்வி அபிவிருத்தியாக இருக்க முடியும்.

இதை விடுத்து என்றோ ஒரு சந்தர்ப்பத்தில் படைக்கப்பட்ட சாதனையை இப்போதும் பெருமையாகப் பேசுவது என்பது கல்வி விடயத்தில் எவ்வகையிலும் பொருத்துடையது அல்ல. எனவே வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் பெண் பிள்ளைகள் பெற்றுக் கொண்ட பெறுபேற்றுடன் ஒப்பிடும் போது ஆண் மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சி நிலையில்உள்ளனஎன்பதுகவனிக்கப்படவேண்டும்.

அதாவது தனித்துப் பெண் பிள்ளைகளை கொண்ட பாடசாலைகள், ஆண் மாணவர்கள் மட்டும் கல்வி கற்கின்ற பாடசாலைகள் என்ற அடிப்படையில் நோக்கும் போது மகளிர் கல்லூரிகளின் அடைவு மட்டம் திருப்தியானதாக இருப்பதைக் காணமுடியும்.

அப்படியானால் எங்கள் ஆண் பிள்ளைகள் கல்வியில் காட்டுகின்ற கரிசனை குறைந்து போகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. இந்தக் கேள்வி எழும்போது; கூடவே எங்கள் சமூகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற கலாசாரச் சீரழிவுகள், போதைப் பொருள் பாவனைகள், அடிக்கடி வடபகுதியில் நடத்தப்படுகின்ற பாட்டுக் கோஷ்டிகள் என்பன எங்கள் ஆண் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் எதிர்வினையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற கோணத்தில் சிந்திப்பது அவசியமாகின்றது.

இச் சிந்தனையின் கீழ் ஆண்பிள்ளைகள் மீதான அதீத கவனிப்பு பெற்றோர், ஆசிரியர், உறவுகள் என்ற சமூக அங்கத்தினரிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்தரப் பெறுபேற்றைப் தீர்மானிப்பதில்லை என்ற சிலரின் முணுமுணுப்புகள் நம் செவிகளில் கேட்கின்றதாயினும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு எங்கள் பிள்ளைகள் கல்வியில் கொண்டுள்ள ஈடுபாட்டை காட்டுகின்ற மிகச் சிறந்த சுட்டி என்பதையும் நாம் மறந்து விடலாகாது.

ஆக, ஆண் மாணவர்களின் கற்றல் முன்னேற்றம் பெண் பிள்ளைகளின் கற்றலிலும் பெரும் முன்னேற்றத்தை தரும் என்ற அடிப்படையிலும், ஆண் மாணவர்களின் கல்வி உயர்வு ஒட்டுமொத்த இனத்தின் உயர்வாகும் என்பதாலும் எங்கள் ஆண் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் - அவர்களின் நடத்தைச் செயற்பாட்டில் அதி கூடிய கவனமெடுப்பது அவசியமும் அவசரமுமாகும்.

# அனைத்து மக்களும் சமமாக வாழ்வதற்கு உரிமை உண்டு

## ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டில் சகல மக்களுக்கும் சம உரிமை உண்டு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேசிய ஐக்கிய சம்மேளன மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்கத்தின் ஆதரவோடு தேசிய ஐக்கிய சம்மேளனம் நடைபெறுவது சந்தோஷத்தை அளிக்கிறது.

நாட்டில் அனைவருக்கும் ஒரே சமமான உரிமை உண்டு எனவும் அனைவரும் சம உரிமையுடன் சமத்துவமாக வாழ முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் சிறுபான்மை என்று யாரும் இல்லை- இருக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

இனவாதம் பேசி மக்களை குழப்ப சிலர் முயற்சிப்பதாகவும் அது ஒருநாளும் சரிவராதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# கண்ணிவெடி பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவைக் கலட்டிப் பகுதியிலுள்ள வீடொன்றின் வளவுக்குள் இருந்து வெடிக்காத நிலையிலிருந்த ஆட்லெறி ஷெல் ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டதாக காங்கேசன்துறைப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

மாவைக்கலட்டிப் பகுதியில் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டிருந்தமையினால், மீள்குடியேறும் நோக்குடன் வீட்டு உரிமையாளர் தனது வளவினைத் துப்புரவு செய்யும் போது, நிலத்தில் வெடிக்காத நிலையில் புதையுண்டிருந்த ஷெல் ஒன்றினைக் கண்டுள்ளார்.

இதுதொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து இராணுவத்தினருடன் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் ஷெல்லினை மீட்டுச் சென்றனர்.

இதேவேளை, அச்சுவேலி இடைக்காடு அக்கரைப் பகுதியிலுள்ள மைதானமொன்றிலிருந்து கண்ணிவெடியொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மைதானத்தில் கண்ணிவெடி இருப்பதினை அவதானித்த பொதுமக்கள் தமக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்கு இராணுவத்தினருடன் சென்று கண்ணிவெடியை மீட்டதாகப் பொலிஸார் மேலும் கூறினர். (எ-11)

# தேர்தலில் அரசுக்கு வாக்களிக்காத மக்கள் தேசத்துரோகிகளா?

## கயந்த எம்.பி.கேள்வி

உடைத்து உடைத்து அரசாங்கம் நடத்தும் தேர்தல் சூது திட்டத்திற்கு நாட்டு மக்கள் இம்முறை சரியான எதிர்ப்பை தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இம்முறை தேர்தலில் அரசாங்கத்திற்கு வாக்களித்தவர்கள் நாட்டை நேசிப்பவர்கள் என்றால் வாக்களிக்காத 76வீத மக்கள் தேசத் துரோகிகளா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாதை திருத்தி, காபெற் போடுவதால் மக்கள் மனதை வெல்ல முடியாது என அரசாங்கத்தின் பிரபலமானவர்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

புதுவருடம் நெருங்கி வரும் காலத்தில் அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களுக்கான வரியை குறைக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (2)

# ஏழு அனகொண்டா பாம்புகள் இந்தியாவுக்கு நாளை அனுப்பி வைப்பு

(கொழும்பு)

விலங்கு பரிமாற்று நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு சொந்தமான 7 அனகொண்டா பாம்புகள் இந்தியாவிலுள்ள திருவானந்தபுரம் நகர மிருகக்காட்சி சாலைக்கு விமானம் மூலம் அனுப்பப்பட உள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2 வயதுடைய ஆண் பாம்பு ஒன்றும் 3 வயதுடைய பெண் பாம்புகளுமே இவ்வாறு அனுப்பப்படவுள்ளன.

இவை நாளை சரக்கு பெட்டி ஒன்றுக்குள் அடைக்கப்பட்ட நிலையில் விமானத்தில் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சென்னையில் தென் பிராந்திய விலங்கு சோதனை தடுப்பு மையய அதிகாரிகள் இப்பாம்புகளை மேற்பார்வை செய்யவுள்ளனர்.

பாம்புகளின் ஆரோக்கியம் சார்ந்த மருத்துவ அறிக்கைகள் சென்னை நகர மிருகக்காட்சிசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக விலங்கியல் பூங்கா மிருக வைத்தியர் ஜேகப் அலக்ஸாண்டர் தெரிவித்துள்ளார். (2)

# தூதரகங்களுடன் இரகசிய தொடர்பு

## 3 அமைச்சர்களின் விபரம் கசிவு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரங்களுடன் இரகசியமான தொடர்புகளை வைத்திருக்கும் மூன்று அமைச்சர்கள் பற்றிய தகவல்கள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்துள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி மூன்று அமைச்சர்களில் ஒருவருக்கு எதிராக ஏற்றுக்கொள்ளும்படியான சாட்சியங்கள் கிடைத் துள்ளதாகவும் ஏனைய இருவர் பற்றிய தகவல்கள் கிடைத்து வருவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்த அமைச்சர்கள் யார், இவர்கள் எவ்வாறு செயற்பட்டனர் என்பது குறித்து மக்கள் எதிர்காலத்தில் அறிந்து கொள்ள முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இத்தகைய அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டதும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (2)

# பொற் குருபூசை

(யாழ்ப்பாணம்)

தவத்திரு யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசையான பொற் குருபூசை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சிவ தொண்டன் நிலைய புராண மண்டபத்தில் நடைபெறும்.

வழமைபோன்று குருபூசை நாளுக்கு முந்திய மூன்று நாட்களும் அதாவது நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை புதன்கிழமை வரை ஆச்சிரம வாழ்வு நாட்களாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வுகளில் அன்பர்களை [illegible] வித்துள்ளனர். (2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## மனிதனும் மகான் ஆகலாம்



✡ பிறருக்காகச் செய்கின்ற சேவையால், நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

✡ சுயநலத்தால் சுகம் கிடைக்கும் என்று மனிதன் முட்டாள்தனமாக நினைக்கிறான். உண்மையில், தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது.

✡ நம்மை நாமே பெரிதாக எண்ணிக் கொண்டு அகந்தை கொள்வது கூடாது. சாதாரணமானவர்களாக நம்மை கருதும் போது தான், நம்மிடம் கருணையும், பணிவும், நல்ல சிந்தனையும் வெளிப்படத் தொடங்கும்.

✡ விவசாயி மடையைத் திறந்து விட்டால் புவியீர்ப்பு விசையால் நீர் தானாக பள்ளத்தைநோக்கிப் பாய்வது போல எல்லா ஆற்றல்களும் மனிதனுக்கு இயல்பிலேயே இருக்கின்றன. ஆன்மிகத்தின் உதவியால் தடைகளைப் போக்கி நாம் நிறை நிலையை அடைய வேண்டும்.

✡ ஆன்மிகத்தின் உதவியால் தீயவர்கள் கூட மகானாக முடியும். வாழ்வில் தடைகளைப் போக்கினால் போதும். நம் இயல்பான குணமாகிய நிறை நிலையின் வாசல்கள் தானாகவே திறந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பிரன்ஸ் வி.கழகத்தின் வருடாந்த வி.விழா

(குருமன்காடு)

வவுனியாவில் பிரன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 ஆவது வருட விளையாட்டுப்போட்டி பிரன்ஸ் விளையாட்டுக் கழகம் ஒவ்வொரு வருடமும் நடத்தும் விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பமானது.

இந் நிகழ்வு பிரன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் செயலாளருமான கு.சஜிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்ாக வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றிய தலைவரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமான தேசமான்ய சு.குமாரசாமி, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் சுந்தராங்கன், வவுனியா மாவட்ட கிரிக்கெட் சம்மேளனத்தின் செயலாளர் கமலன், பிரன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் பொருளாளர் சாந்தகுமார், உபதலைவர் ஜனகன், செயலாளர் பாலன், உறுப்பினர்களான துசா ந்த பெர்னாண்டோ, சுரேந்திரன், ஹரி, ரதீஸ், ரெபின் ஆகியோரும் கலந்து கொண் டனர்.

மங்கள விளக்கேற்றலுடன், பாடசாலை மாணவர்களுக்கான கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பமானது. தொடர்ச்சியாக, அனைத்து மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்குமான கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்று, இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறும். (க-250)

### கோப்பாய் பிரதேச இளைஞர் கழக

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி; கட்டப்பிராய் முழுமதி இளைஞர் சம்பியன்





கோப்பாய் பிரதேச இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப்போட்டிகளின் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இத் தொடரில் பதின்மூன்று அணிகள் பங்குபற்றின. அதனடிப்படையில் இறுதிப் போட்டிக்கு கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழகம் மற்றும் கட்டப்பிராய் ஞானபாஸ் கரோதயம் இளைஞர் கழகம் ஆகிய அணிகள் தேர்வாகின.

இறுதிப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழகத்தினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர்.

அதன்படி கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழகத்தினர் 5 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 42 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் கனிஸ்ரன் 19 ஓட்டங்களையும் துஸ்யந்தன் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கட்டப்பிராய் ஞானபாஸ்கரோதயம் இளைஞர் கழகம் சார்பாக ராம் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

தொடர்ந்து 43 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கட்டப்பிராய் ஞானபாஸ்கரோதயம் இளைஞர் கழக அணியினர் 4.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 26 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியை தழுவிக்கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் ராம் அதிகபட்சமாக 18 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழகம் சார்பாக நிசாந், கனிஸ்ரன், தாருஹாசன், துஸ்யந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்த வெற்றி மூலம் 2014 ஆம் ஆண்டுக்கான கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு இளைஞர் கழக கிரிக்கெட் சம்பியனாக கட்டப்பிராய் முழுமதி இளைஞர் கழகத்தினர் தெரிவாகினர்.

பெண்கள் பிரிவில் வாதரவத்தை தமிழ் நிலா இளைஞர் கழக பெண்கள் அணியினருக்கு, வேறு அணிகள் எவையும் பங்குபற்றாதவிடத்து நேரடியாகவே வெற்றி வழங்கப்பட்டது. (க-23)

## பருத்தித்துறை பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா முடிவுகள்

**.வலைப்பந்து**

முதலாமிடத்தினை நக்கீரன் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**எல்லே ஆண்கள்**

முதலாமிடத்தினை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை வீனஸ் வி்ளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**எல்லே பெண்கள்**

முதலாமிடத்தினை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை நக்கீரன் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**கரப்பந்து ஆண்கள்**

முதலாமிடத்தினை வல்வை விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை விவேகானந்தா விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**கரப்பந்து பெண்கள்**

முதலாமிடத்தினை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை வல்வை விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**கிரிக்கெட் ஆண்கள்**

முதலாமிடத்தினை கழுகுகள் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை வீனஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**கிரிக்கெட் பெண்கள்**

முதலாமிடத்தினை கழுகுகள் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**உதைபந்து ஆண்கள்**

முதலாமிடத்தினை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை வல்வை விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**உதைபந்து பெண்கள்**

முதலாமிடத்தினை சென்தோமஸ் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை வல்வை விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**கபடி ஆண்கள்**

முதலாமிடத்தினை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

**கபடி பெண்கள்**

முதலாமிடத்தினை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தினை வல்வை விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

(க)

# மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க பாடசாலை மாணவர்கள் சாதனை



மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க பாடசாலை மாணவர்கள் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்று சாதனை படைத்து மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஈட்டி எறிதலில் சண்முகம் சயந்தன் முதலாமிடத்தினையும் நீளம் பாய்தலில் கதிரவேலு ராஜ்குமார் மற்றும் சசிக்குமார் கஜானா முதலாமிடத்தினையும் உயரம் பாய்தலில் கண்ணதாசன் கீர்த்திகா இரண்டாமிடத்தினையும் பெற்றுள்ளனர்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வெற்றிபெற்ற மாணவர்களையும் கல்லூரி அதிபர், பிரதி அதிபர் மற்றும் விளையாட்டு பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம். (க)

## சைக்கிள் மரதன் ஓட்டப் போட்டி

95 ஆவது அரியாலை தேசிய திருநாட் கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக இடம்பெறும் சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான சைக்கிளோட்டம், வட மாகாண ரீதியில் 50 கிலோமீற்றர்கள் தூரம் கொண்டதாகவும் இடம்பெறும்.

பெண்களுக்கான சைக்கிளோட்டம் உள்ளூர் ரீதியானதுடன் 10 கிலோ மீற்றர் தூரம் கொண்டது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டம் உள்ளூர் ரீதியானதுடன் 10 கிலோ மீற்றர் தூரம் கொண்டது.

பெண்களுக்கான மரதன் ஓட்டம் உள்ளூர் ரீதியானதுடன் 5 கிலோ மீற்றர் தூரம் கொண்டது.

இப் போட்டிகள் யாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டுக்கழக முன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அணி தோல்வி

# பந்தயம் கட்டிய வர்த்தகர் நிலத்தில் விழுந்து திடீர் மரணம்

பங்களாதேஷில் இடம்பெற்று முடிந்த உலகக் கிண்ண இருபது-20 போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறும் என பந்தயம் கட்டியிருந்த கம்பஹா வர்த்தகர் ஒருவர் இந்தியாவின் தோல்வியை அடுத்து திடீர் என மரணமடைந்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் இந்தியா இறுதிப் போட்டியில் வெற்றி பெறுவது உறுதியென தெரிவித்து பந்தயம் கட்டியுள்ளார்.

அத்துடன் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற குறித்த இறுதிப் போட்டியை பந்தய நிலையம் ஒன்றில் இருந்து அவர் கண்டு களித்துள்ளார்.

இதன்போது போட்டி இறுதியில் இலங்கை அணி வெறறிபெற்று விட்டதாகவும் இந்தியா தோல்வியடைந்து விட்டதாகவும் அறிவிக்கப் படவே குறித்த வர்த்தகர் மயக்க முற்று கீழே விழுந்துள்ளார்.

இதனையடுத்து அந்த வர்த்தகர் உடனடியாகவே கம்பஹா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் கம்பஹா திடீர் மரண விசாரணை அதிகாரி வைத்தியர் பீ.பீ.ஆர்.பீ.ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது சாட்சியமளித்த குறித்த வர்த்தகரின் மனைவி இதற்கு முன்னர் தனது கணவருக்கு எவ்வித நோய்களும் இருக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மேற்கொள்ளபட்ட பிரேத பரிசோதனைகளில் திடீர் மாரடைப்பு காரணமாகவே குறித்த வர்த்தகர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-11)

# இலங்கை அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து மகத்தான வரவேற்புக்கும் ஏற்பாடு!



இருபதுக்கு இருபது கிரிக்கெட் இறுதிப் போட்டியில் உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணி வீரர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் நாட்டில் டாக்கா நகரில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையில இருபது-20 உலகக் கிண்ணத்தை இலங்கை அணி சுவீகரித்துக் கொண்டது.

இறுதிப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று இலங்கை அணி சாம்பியன் பட்டம் வென்றது.

அணியின் தலைவர் லசித் மலிங்க மற்றும் இறுதிப் போட்டியுடன் இருபது-20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்ட குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன ஆகியோருக்கு ஜனாதிபதி தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2014ஆம் ஆண்டு பங்களா தேஷில் இடம்பெற்ற இருபது-20 உலக கிண்ணப்போட்டியில் கிண்ணத்தை வென்ற இலங்கை அணி இன்று செவ்வாய்க் கிழமை நாடு திரும்புகிறது. இந்த தகவலை இலங்கை கிரிக்கெட் சபை நேற்று திங்கட்கிழமை காலை அறிவித்துள்ளது

இந்த நிலையில் இலங்கை அணியை வரவேற்பதற்காக இலங்கை கிரிக்கெட் சபைஏற்பாடுகளை செய்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து திறந்த ஜீப் வண்டியில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் அழைத்துச்செல்லப்படவுள்ளனர்

இதன்போது பொதுமக்கள் தமது வாழ்த்துக்களை அவர்களுடன்பரிமாறிக கொள்ளலாம் என்று இலங்கை கிரிகெட் அறிவித்துள்ளது. (எ-11)

# 1996 உலக சம்பியனின் நாயகன், 2014 உலக சம்பியனுக்கு வாழ்த்து




1996 உலக சம்பியனின் நாயகன், 2014 உலக சம்பியனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு எதிராக உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இருபதுக்கு-20 அணிகளின் தரவரிசையில் இலங்கை முதலாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இறுதிப் போட்டி தொடர்பில் 1996 ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய போது தலைவராக செயற்பட்ட அர்ஜுன ரணதுங்க இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று, இந்திய அணிக்கு துடுப்பெடுத்தாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியமை மிகவும் சிறந்ததொரு செயற்பாடாகவே நான் கருதுகின்றேன்.

தொடர்ச்சியாக மழையுடன் கூடிய வானிலை நிலவியமையினால், மைதானம் ஈரத்தன்மையில் இருந்ததை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வீசப்படுகின்ற பந்து சரியான முறையில் செயற்படவில்லை. இந்த தொடரில் குறிப்பாக சங்கக்கார சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடாத பட்சத்திலும், இறுதிப் போட்டியில் இறுதிவரை களத்திலிருந்து துடுப்பெடுத்தாடியமை சிறந்ததாகவே நான் கருதுகின்றேன்.

மத்யூசுக்கு முன்னர் திஸர பெரேராவை துடுப்பெடுத்தாட அனுப்பியமையும் வரவேற்கத்தக்கது. இந்த தீர்மானம் மிகவும் சிறந்ததொரு தீர்மானம். அவ்வாறு அனுப்பப்படுகின்ற நபர் ஆட்டமிழக்கும் பட்சத்தில், பலர் திட்டுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

எனினும், சிறந்த தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. 130 என்பது மிகப் பெரிய வெற்றியிலக்காக கருதப் படாத பட்சத்திலும், அணி என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து விளையாடியமை வரவேற்கத்தக்கது.

அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் எமது கௌரவத்தை செலுத்துகின்றேன். (க)



ஐந்தாவது உலகக்கிண்ண இருபது-20 போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் லசித் மலிங்கவையும் பெண்களுக்கான உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவி மக்லேனிங்கையும் படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் ரசிகருக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்த தோனி



சிகாகோவிலிருந்து பாகிஸ்தான் ஆட்டங்களை காண வந்த, அந்நாட்டு ரசிகர் ஒருவருக்கு இறுதிப் போட்டியை ரசிக்க டிக்கெட்டை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் தோனி. இருபது-20 உலகக் கிண்ணம் பங்களாதேஷில் நடைபெற்றது.

இந்தத் தொடரில் பாகிஸ்தானின் ஆட்டத்தைக் காண, அந்த அணியின் ரசிகர் முகமது பஷீர் சிகாகோவில் இருந்து வந்திருந்தார். தனது தேச அணி அரையிறுதிக்கு முன்னரே வெளியேறினாலும், இந்தியாவின் ஆட்டத்தைக் காண ஊருக்குத் திரும்பாமல் இருந்தார்.

சமீபத்தில் இந்திய அணி பயிற்சி மேற்கொண்டபோது வேடிக்கை பார்கக சென்ற இவரை தோனி சந்தித்தார்.

சம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடந்த ஆட்டத்தைக் காண பஷீர் வந்திருந்ததால், தோனி அவரை அடையாளம் கண்டு கொண்டு அவரைப் பற்றி விசாரித்துள்ளார்.

தன்னிடம் இறுதிப் போட்டியைக் காண டிக்கெட் இல்லாததை கூறிய பஷீருக்கு பயிற்சியாளரிடம் கூறி காம்ப்ளிமென்ட்ரி டிக்கெட்டை தோனி ஏற்பாடு செய்துள்ளார். இந்தச்சம்பவத்திற்கு பிறகு தோனியின ரசிகராக மாறிவிட்டார் பஷீர். (க)

# யுவராஜ்க்கு ஆதரவளித்த தோனி



இருபது-20 உலக கிண்ணத்தை கைவிட்டதற்கு மந்தமாக ஆடிய யுவராஜ் சிங்தான் காரணம் என ரசிகர்கள் விமர்சனங்களை பரப்பி வருகின்றனர்.

இந்த நிலையில், இந்திய அணியின் அணித்தலைவர் தோனி, யுவராஜ்சிங்கிற்கு ஆதரவு அளித்துள்ளார்.

இது பற்றி ஊடகங்களுக்கு பதிலதித்த தோனி, யுவராஜ் சிங் தன்னால் முடிந்தவரை சிறப்பாக ஆட முயற்சித்தார். கிரிக்கெட் போன்ற குழு விளையாட்டில் ஒரு குறிப்பிட்ட நபரை குற்றம் சாட்டுவதில் எந்த பயனும் இல்லை.

மோசமான கிரிக்கெட் ஆட்டத்தை ஆடவேண்டும் என்று எந்த ஒரு கிரிக்கெட் வீரரும் விரும்புவதில்லை. யுவராஜ் சிங்கை பொறுத தவரை அது அவருக்கான நாள் அல்ல என்று அவர் தெரிவித்துள்ளார்.

யுவராஜ் சிங் ஏற்கெனவே ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் தனது இடத்தை இழந்துள்ளார். இந்த நிலையில், நடந்து முடிந்த இருபது-20 உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் 5 போட்டிகளில் வெறும்100 ஓட்டங்கள்மட்டுமே எடுயிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் அவர் மீண்டும் இந்திய அணியில் இடம் பெறுவது கேள்விக் குறியாகியுள்ளது. (க)

## புலிகள் செய்த...

செய்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் அதனைக்கூட மறந்து விட்டு தற்போது வெளிநாட்டு சக்திகளுக்கு உந்து சக்தியை கொடுத்து வருகின்றனர்.

மேற்குலக நாடுகளால் முடிவுக்கு கொண்டு வர முடியாது என்று கூறிய பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்தமை, அவர்களுக்கு பிரச்சினையாக மாறியுள்ளது.

முன்னேறிய நாடுகள் என தம்மை கூறிக்கொள்ளும் நாடுகள் பயங்கரவாதத்தின் தாக்கங்களை எதிர்நோக்கி வருகின்றன.

அந்நாடுகளில் அரசியல் கலாசாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும்போரை முடிவுக்கு கொணடு வந்த தற்போதைய இலங்கை அரசாங்கம், முழு நாட்டை அபிவிருத்தி செய்து வருகிறது எனவும் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். (எ-11)

## மாணவர்...

கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பொலிஸாரிடம் கேட்டபோது பொறுப்பதிகாரி இல்லை என தெரிவித்தனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் ...

பாடு இலங்கையுடனான உறவுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக ஊடகங்கள் கருத்து வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இம்முறை கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்காமைக்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் அனுப்பியுள்ளார். ஆயினும், இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் தொடர்பில் எதுவும் தெரியவரவில்லை.

அதேபோன்று, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு உறுதியான ஆதரவை வழங்கியமைக்காக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை கடந்த திங்கட்கிழமை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்திருந்தார்.

சர்வதேச விசாரணைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கேள்வி எழுப்பியும், இலங்கைக்கு எதிரான பிரேரணையின் 10வது பந்தியை நீக்கும் திருத்த யோசனையை முன்வைத்தும் இப்பிரேரணை மீதான

## பிரேரணை வாக்...

யல் அழைத்துப் பேசியதாக பீரிஸ் கூறியுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பில் இந்தியா வித்தியாசமான அணுகுமுறையை கடைப்பிடிக்க முடிவெடுத்துள்ளதாகவும், இம்முடிவு அதிகாரிகள் மட்டத்திலேயே எடுக்கப்பட்டதாகவும் சல்மான் குர்ஷித் தன்னிடம் கூறியதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆயினும், இது தொடர்பிலான இந்தியாவின் முடிவு என்ன என்பதை அவர் கூறவில்லை என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25வது கூட்டத்தொடரில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான

வாக்கெடுப்பை ஒத்திவைக்க ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் பாகிஸ்தான் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## கண்காணிப்பாளர்...

நளின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க செய்தித்தாளுக்கு தகவல் அளித்துள்ள அவர், நவநீதம்பிள்ளை ஏற்கெனவே தயாரித்து வைத்திருக்கும் அறிக்கை, கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வந்து விசாரணை நடத்துவதன் காரணமாக மாற்றம் பெறப் போவதில்லை என்று நளின் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டின் கொள்கையை மேற்கு நாடுகளுக்கு விட்டுக்கொடுத்ததாக இந்த செயல் அமைந்து விடும் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாகாணசபை தேர்தலின் முடிவுகளை கொண்டு மேற்கத்தைய நாடுகள் இலங்கை மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ளவேண்டும்.

இதேவேளை உள்ளூர் பொறிமுறையின் மூலம் பிரித்தானியா, நவநீதம்பிள்ளையின் யோசனையை குப்பை தொட்டியில் எறியும் நிலை ஏற்படவேண்டும்.

பிரித்தானியா காலனித்துவ காலத்திலும் தற்போதும் இலங்கையில் பிரச்சினையை உருவாக்க முனைவதாக நளின் டி சில்வா தெரிவித்துள்ளார். (எ-11)

மூன்றாவது பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பங்கேற்பதில்லை என எடுக்கப்பட்ட முடிவு அரசியல் மட்டத்திலேயே எடுக்கப்பட்டதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சுஜாதா சிங் தெரிவித்திருந்த நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## தேசிய ஐக்கியத்தின்...

தமிழ் மக்கள் சிங்கள மொழியை கற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுதந்திரமான நிலைமை ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே இன்று தேசிய ஐக்கியம் தேசிய ஒருமைப்பாடு பற்றி பேச முடிந்துள்ளது.

பல்வேறு தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் முன்வைக்கப்படும் நிலைப்பாடுகள் மூலம் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்று நான் நம்பவில்லை.

இலங்கை கிரிக்கெட் அணி இருபது- 20 உலகக் கிண்ணத்தை நேற்று முன்தினம் வென்றபோது மக்கள் இடையில் தேசிய ஐக்கியம் வெளிப்பட்டமையானது இதற்கு சிறந்த உதாரணமாகும் எனவும் ஜனாதிபதி கூறினார். (எ-11)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532


## மரண அறிவித்தல்



**பொன்னுத்துரை இராமலிங்கம்**

(இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்து சபை உத்தியோகத்தர்- CTB)

96, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆலங்குழாய் வீதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராமலிங்கம் அவர்கள் 07/04/2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை ரேவதிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், சிவராணியின் பாசமிகு கணவரும், புவனேஸ்வரி (கனடா), சீதாலட்சுமி, பாலிதராஜா (சுவிஸ்), சந்தானலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மதன்லால் (ஜேர்மனி), மீராலினி, நஜன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) லக்ஷனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், டெனி, தர்மரத்தினராஜா, தர்ஷிகா, தயாளசீலன் ஆகியோரின் அன்பு மாமனும், ரஜீன், அஜய், ரவீனா, சரண்ஜன், ஜனோசன், அபினா, ஆரணி, ஹரிணி, இஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18, ஆலங்குழாய் வீதி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
இ. நஜன் (மகன்)
0775487486

(C-6967)


**BARATHY**

சித்தன்கேணி

அண்மையில் வெளிவந்த O/L பரீட்சையில் அதி உயர் பெறுபேறுகளைப் பெற்ற எம் மாணவர்களை வாழ்த்தி இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட...

**O/L DAY CLASS**

நாளை ஆரம்பம் :
09.04.2014 புதன் 8.00 A.M

நீங்கள் நன்கு அறிந்த இப் பிரதேசத்தின் மிகப் பிரபல்யம் பெற்ற ஆசிரிய குழுவினால்...

| | |
|---|---|
| ✲ விஞ்ஞானம் **தேவா** | ✲ கணிதம் **சிவரூபன்** |
| ✲ தமிழ் **பாலா, குகபரன்** | ✲ வரலாறு **சுதன், பார்த்தீபன்** |
| ✲ ஆங்கிலம் **சுதர்சன்** | ✲ சமயம் **N.T. தரன்** |
| ✲ வர்த்தகம் **திருக்குமரன்** | ✲ விவசாயம் **சிவகஜீபன்** |
| ✲ சுகாதாரம் **பார்த்தீபன்** | ✲ நாடகம் **கஜிதரன்** |
| ✲ புவியியல் **சர்வேஸ்வரன்** | ✲ குடியுரிமை **பாபுதரன்** |

மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.
**குறிப்பு:** இம்முறை 80 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
உங்கள் அனுமதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.
A/L-2016 கலை , வர்த்தக புதிய பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
(C-6966)


## அரசியல்வாதிகளின்...

பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசியலமைப்பு சபைகளின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கும் மக்களின் கோரிக்கைகளை அரசியல் தலையீடு எனக் கருதும் பழக்கத்தை அதிகாரிகள் கொண்டிருப்பதாக ஜனாதிபதிக்கு தெரியவந்துள்ளது என வீரதுங்க தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான எண்ணப்பாடு காரணமாக அந்த கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைப்பதில்லை என ஜனாதிபதிக்கு தெரியவந்துள்ளது.

மக்களின் கோரிக்கைகளை அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்க மக்கள் பிரதிநிதிகளுக்கு உரிமையும் கடமையும், பொறுப்பும் உள்ளது என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு பதில் வழங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள் உட்பட அரச நிறுவனங்களின் அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர்.

இதனால் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளதாக லலித் வீரதுங்க தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஜனாதிபதிக்கு...

இப்பட்டியலில், முதலிடத்தை சீன அதிபர் சீ ஜின்பிங்கும் இரண்டாமிடத்தை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் பிடித்துள்ளனர்.

இவர்கள் தவிர பா.ஜ.க பிரதம வேட்பாளர் நரேந்திர மோடி 4-வது இடத்தையும், காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி 5-வது இடத்தையும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் 6-வது இடத்தையும் ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் பான் கீ மூன் 8-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

மேலும் இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் 11-வது இடம், குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி 19-வது இடம், தொழிலதிபர்கள் முகேஷ் அம்பானி 21-வது இடம், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா 22-வது இடம், லக்ஷ்மி மிட்டல் 36-வது இடம், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி 44-வது இடம், சமூக ஆர்வலர் அண்ணா ஹசாரே 46-வது இடம், பொருளியல் அறிஞர் அமர்த்திய சென் 52-வது இடம், ஹிந்தி நடிகர் அமிதாப் ப்ச்சன் 63, தமிழ் திரைப்பட நடிகர் ரஜினிகாந்த் 66வது இடம், நடிகர் அமீர்கான் 68வது இடம், கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் 76வது இடம், நடிகை ஐஸ்வர்யா ராய் 84வது இடம், நடிகர் சல்மான் கான் 98வது இடம், கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி 99வது இடத்தையும் பிடித்துள்ளனர். (எ-11)


**காணி வாடகைக்கு**

கே.கே.எஸ். வீதி, பிரதான வீதியில் தாவடிச் சந்திக்கு அருகாமையில் காணி வாடகைக்கு உண்டு. கட்டிடப் பொருள், மரக்காலை வாணிபத்திற்கு உகந்தது.

தொடர்பு :
**0776155794**
(6095)

26வது வருட கல்விச் சேவையில்
**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
**O/L DAY CLASS**
ஆரம்பம் : 09-04-2014 புதன் 8.00 மணி
புதிய அனுமதிகள் இன்றுமுதல்
(c-6965)

நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது...

**திருமறைக் கலாமன்றம்**
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை
**வேள்வித் திருமகன்**
(திருப்பாடுகளின் காட்சி)



காலம் : ஏப்ரல் 10,11, 12, 13 - 2014
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
- நான்கு நாள்களுக்கு -
நேரம் : மாலை 6.45 மணி
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2393
- திருமறைக் கலாமன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.